முச்சந்தி முரளி

Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 231

ஞாயிற்றுக்கிழமை
14 ஜூலை 2024

ஆனி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




"எங்கட ஆக்கள் எதிலதான் முறைகேடு செய்யாமல் விட்டிருக்கினம்?"

யாழ்ப்பாணத்தில்

# சூரிய மின்னிணைப்பில் தொடர்ச்சியான மோசடி

## அறிக்கை வழங்குமாறு உத்தரவு ஜனாதிபதி செயலகம் அதிரடி

**கொழும்பு, ஜூலை 14**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சூரியசக்தி மின்னிணைப்பு வழங்கலில் முறைகேடுகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், ஜனாதிபதி செயலகம் அறிக்கையைக் கோரியுள்ளது.**

14

ஜனாதிபதித் தேர்தல்

## அச்சுப் பணிகளுக்காக 800 மில்லியன் செலவு

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஜனாதிபதித் தேர்தல் அச்சுப் பணிகளுக்காக அதிகபட்சம் 600 முதல் 800 மில்லியன் ரூபா வரை செலவாகுமென அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பான திகதிகளை அறிவிக்கும் அதிகாரம் ஜூலை 17ஆம் திகதியுடன் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் வரவுள்ள நிலையி

14

கொக்குத்தொடுவாய் அகழ்வு நடக்கும் சமநேரத்தில்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுப் போர்!

வவுனியா, ஜூலை 14

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்படும் மனிதப்புதைகுழி அகழ்வுகள் சர்வதேசக் கவனத்தைப் பெற்றுள்ள பின்னணியில்,

14

## சீன அரிசியின் உதவியால் பிரதமரை அறிந்த மக்கள்!

### ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர் சந்திரசேகரன் நேற்று விளாசல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

சீன அரிசியை வழங்க வடக்குக்கு வருகைதந்ததன் மூலம் தான், நாட்டின் பிரதமர் யார் என்று வடக்கு மக்கள் அறிய முடிந்தது என்று ஜே.வி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே, சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

14

ஜனாதிபதித் தேர்தல்

## தடைகோரிய மனு நாளை விசாரணை

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை நாளை இடம்பெறவுள்ளது.

14



## மூதாட்டியைத் தாக்கிய மைத்துனி கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

கொடிகாமம் பகுதியில், மூதாட்டியைத் தாக்கிய மைத்துனி, மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டை அடுத்து கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

14

## பேருந்துக்குள் கத்திவெட்டு!

### சாரதியும் பயணியும் படுகாயம் அரியாலையில் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

பேருந்தில் பயணித்த இருவர், பேருந்தின் சாரதி மீதும் பயணி ஒருவர் மீதும் கத்தியால் வெட்டித் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர். யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

14



## உண்மையை உரக்கச் சொல்லும் உதயன்

கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நேற்று மாலை இடம்பெற்றது. சிறார்களுக்கான விநோத உடைப் போட்டியின்போது, த.விபுசன் என்ற சிறுவன் உதயன் பத்திரிகைத் தாளைத் தாங்கிவந்து, 'நான் உதயன், உண்மைகளை உரக்கச் சொல்வேன்' என்று நாட்டு நடப்புகளைச் சொல்லி பலரது பாராட்டுகளையும் பெற்றார். (அ-ம-125)

## குடைசாய்ந்த ஓட்டோ முற்றாகத் தீக்கிரை!

### காயங்களின்றி தப்பினார் சாரதி

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமராட்சி - நெல்லியடி பகுதியில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ, குடைசாய்ந்து விபத்துக்குள்ளான நிலையில் முற்றாகத் தீக்கிரையானது.

நெல்லியடி மத்திய கல்லூரிக்கு முன்பாகவே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. நெல்லியடி பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

14

சஞ்சீவி


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக தமிழ்க் கூட்டணியுடன் இந்தியத் தூதுவர் தனியான சந்திப்பு

கொழும்பு, ஜூலை 14

**இந்தியத்தூதுவருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணிக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்றது.**



இக் கூட்டத்தில் ரெலோ சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன், வினோநோகராதலிங்கம், புளொட் சார்பில் க.சிவநேசன்,ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் வேந்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் சார்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை, பொருளாதார பிரச்சினைகள் பற்றி முக்கியமாக கலந்துரையாடப்பட்டன.

ஜனாதிபதித் தேர்தல், பொது வேட்பாளர் விடயம் தொடர்பாகவும், நில அபகரிப்பு, மீனவர்கள் பிரச்சினை குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் வடக்கு - கிழக்கு பகுதியில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்தியத் தூதுவர் பதிலளிக்கையில், வடபகுதியில்கிழக்குமாகாண பகுதியில் நடைபெறுகின்ற அபிவிருத்தி வேலைதிட்டங்கள் தொடர்ந்தும் நடைபெறும் எனவும் கூறப்பட்டது.

வடப்குதி மீனவர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் ஊடாக அவர்களுக்கான கடற்றொழில் உபகரணங்கள், நிவாரணங்கள் இந்திய அரசால் வழங்கப்பட உள்ளதாகக் கூறினார்.

2005ஆம் ஆண்டுக்குப்பின்னர் தமிழர் தரப்புக்கு பேரம்பேசக் கூடிய ஒரு களமாக இந்த ஜனாதிபதித் தேர்தல் சந்தர்ப்பமாக இருப்பதாகவும் இதனைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்றும் எல்லாக்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு தமிழர் தரப்பு வாக்குகளைப் பயன்படுத்தி ஓர் உடன்படிக்கை செய்து தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கலாம் எனவும் குறித்த சந்திப்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஒ-27-66)

# புகை கக்கினால் கறுப்புப்பட்டியல்

கொழும்பு, ஜூலை 14

அதிக புகையை வெளியிடும் வாகனங்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகன உமிழ்வு பரிசோதனை அறக்கட்டளை நிதியம் தெரிவித்துள்ளது.

வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் புகை சான்றிதழை பெற்றுக் கொள்ளவேண்டாம்.

புகை கக்கியவாறு வீதியில் பயணிக்கும் வாகனங்கள் தொடர்பில் 070 3500 525 என்ற வட்ஸ்ஆப் இலக்கத்துக்கு முறைப்பாடுகளை அனுப்பலாம்.

அதிக புகை வெளியேறுவதை அவதானிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராக பராமரிப்பு உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும், இல்லையெனில் வாகனத்துக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் அதன் பணிப்பாளர் தசுன் கமகே குறிப்பிட்டுள்ளார். (ச-555)

# வெளிநாட்டுப் பயணம் இறுக்கமான நடைமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 14

வெளிநாட்டுப் பயணம் தற்போது இறுக்கமான சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும், இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டதாகவும் மாறியுள்ளமையால் அரச சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பான தொழிலாளர் ஆட்சேர்ப்பு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகள் தொடர்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடுபவர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் அண்மையில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம், பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளில் தொழில் மற்றும் இலங்கை வேலைவாய்ப்பு அமைச்சின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-66)

# இலங்கை - ருமேனியா புரிந்துணர்வு ஒப்பந்தம்

*அமைச்சரவையும் அங்கீகாரம்*

பல்வேறு துறைகளில், இலங்கை மற்றும் ருமேனியாவுக்கு இடையிலான ஒத்துழைப்புத் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த ஒப்பந்தத்துக்கிணங்க, கல்வி, அறிவியல், கலாசாரம், வெகுஜன ஊடகம், இளைஞர்கள் மற்றும் விளையாட்டுத் துறைகளில் முதல் ஒத்துழைப்புத் திட்டத்துக்கான கட்சிகளின் உடன்பாட்டை அரசு வெளிப்படுத்தியுள்ளது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் ருமேனியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போதே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-25)

# அகழ்வாய்வு மையத்துக்கு பேராசிரியர் ரகுராம் பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஆனைக்கோட்டையில் 44 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நடைபெற்று வரும் நிலையில் அகழ்வாய்வு மையத்தை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பார்வையிட்டார். புலம்பெயர் நிதிப்பங்களிப்புடனும், யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் அதன் தலைவர் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தலைமையில் இந்த அகழ்வுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் அங்கு வருகை தந்த யாழ். பீடாதிபதி ஆய்வில் ஈடுபடும் யாழ். தொல்லியல் திணைக்களப் பொறுப்பதிகாரி வி.மணிமாறன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக தொல்லியல்துறையின் விரிவுரையாளர் அஜித்தா சுகந்தன் ஆகியோருடன் அகழ்வுப்பணிகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

தற்போது வரை அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருள்களின் வரலாற்று முக்கியத்துவம் அதன் தொன்மை, கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள்களின் ஆவணப்படுத்தல் பணி, அகழ்வாய்வில் பின்பற்றப்படும் நெறிமுறை, இடத்தேர்வு, கலாசார மண்படை அடுக்குகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். (ஒ-25-125)



# பரு. மருத்துவமனையில் குருதிக்குப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜூலை 14

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடமராட்சி பிரதேசத்தில் அதிகரித்து வரும் விபத்துச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்படுபவர்கள் உள்ளிட்ட குருதி தேவைப்பாடு உடைய நோயாளர்களது எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. குருதி வங்கியில் மாதாந்தம் 50 அலகு குருதி கையிருப்பாக பேணப்பட்டு வரும் நிலையில் கடந்த மாதத்தில் 82 அலகு குருதி தேவைப்பட்டதாகவும் மேலதிக அலகு குருதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குருதி வங்கியில் இருந்து பெற்றே பயன்படுத்தப்பட்டுள்ளது. வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கிக்கு நேரடியாக வருகைதந்து குருதித் தானம் செய்யமுடியும் என்றும் , குருதிக் கொடை நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் இயலுமை உள்ளவர்கள் 0213154300 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொள்ளுமாறும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனக் கையளிப்பு ஆளுநரின் விடாமுயற்சியே!



## யாழ்ப்பாணத்தில் பிரதமர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 14**

**வடக்கு மாகாண ஆளுநரின் தொடர்ச்சியான முயற்சியின் பயனாகவே நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் 165 தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இவர்களுக்கான நிரந்தர நியமனங்களைப் பெற்றுக் கொடுக்க பாரிய பிரயத்தனங்கள் முன்னெடுக்கப்பட்டன. நீண்டகால ஏக்கத்துக்கு ஒரு தீர்வு காணப்பட்டுள்ளது. இதற்கு ஆளுநரின்தொடர்ச்சியான முயற்சியே காரணமாக அமைந்துள்ளது.

நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொள்ளும் ஊழியர்கள் தங்களின் கடமைகளை உரியவாறு முன்னெடுக்க வேண்டும்- என்றார். (ச-26)



# அமிர்தலிங்கத்தின் 35 ஆவது நினைவேந்தல் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பண்ணாகம் அண்ணா கலைமன்றம் ஆகியன இணைந்து வலிகாமம் மேற்கு பிரதேசசபை முன்பாக அமைக்கப்பட்டுள்ள அமிர்தலிங்கத்தின் திருவுருவ சிலையின் முன்றலில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு திருவுருவசிலைக்கு மலர்மாலையும் அணிவிக்கப்பட்டது.

நினைவேந்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளைத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், திருமதி யசோதை சரவணபவன், வலி.மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், பிரதேசசபை முன்னாள் உறுப்பினரான ஜெயந்தன், கௌரி காந்தன் மாநகரசபை முன்னாள் உறுப்பினர் முகுந்தன், பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-125-66)

# இசை நிகழ்வில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம் , ஜூலை 14

இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தென்னிந்திய பிரபல பாடகர்கள் கலந்து கொண்ட பிரமாண்டமான இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் குழப்பம் விளைவித்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். (ஒ-22-27)

யாழ்., கிளிநொச்சிக்கு

# மாவட்டச்செயலர்களை உடன் நியமிக்குக

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர மாவட்டச் செயலர்களை உடனடியாக நியமியுங்கள் என்று பிரதமரும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.(ஒ-25,26)

# திறன்விருத்திப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 14

'மேம்பட்ட மனித உரிமைகள்' எனும் தலைப்பில், மூன்று நாள் திறன்விருத்திப் பயிற்சிப்பட்டறை, யாழ்ப்பாணம் - புங்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது. ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியில், இலங்கையின் வடக்கு மாகாணத்தில், கிறிசலிஸ் நிறுவனம் நடைமுறைப்படுத்தும் 'பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களினூடாக அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்கு திறன் மிக்க சமூகங்களை மேம்படுத்தல்' எனும் கருத்திட்டத்தின் ஓர் அம்சமாக முன்னெடுக்கப்பட்ட மேற்படி திறன் விருத்திப் பயிற்சிநெறியில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வில் சட்டத்தரணிகளான கு.ஐங்கரன் மற்றும் திருநாவுக்கரசு, கிறிசலிஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், குடிசார் அமைப்புகளின் பிரதிநிதிகள், மனித உரிமை பாதுகாவலர், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-159)

## வினாடிவினாப் போட்டி: மருத்துவ பீடம் 2ஆம் இடம்

இலங்கை மருத்துவபீடங்களுக்கு இடையிலான உயர்சுற்றியல் வினாடிவினாப் போட்டியில் யாழ். மருத்துவபீட அணி சாதனை படைத்துள்ளது. இரு பகுதிகளாக நடைபெற்ற போட்டியில் 10 அணிகள் பங்குபற்றியிருந்தன. முதல் பகுதி முடிவில் சிறந்த அணிகளாக யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை பல்கலைக்கழக அணிகள் தெரிவு செய்யப்பட்டன. இந்த மூன்று அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 1 ஆம் இடத்தை கொழும்பு, 2 ஆம் இடத்தை யாழ்ப்பாணம், 3 ஆம் இடத்தை பேராதனை மருத்துவபீடங்கள் பெற்றுக்கொண்டன. (ஒ-25)



# வடக்கு சுகாதாரத் துறையில் ஊழல்கள்; அசண்டையீனத்தில் திணைக்களங்கள்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு!


**கிளிநொச்சி, ஜூலை 14**

வடக்கு மாகாண சுகாதாரத் துறையில் பல ஊழல் மோசடிகள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, அவை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அவை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததன் விளைவே, தொடர்ச்சியாக ஊழல் மோசடிகள் இடம்பெறக் காரணமாக அமைந்துள்ளது எனப் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதாரத்துறை மீது நீண்டகாலமாக ஏராளமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பலவற்றுக்கு விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் மாகாண கணக்காய்வுத் திணைக்களம், தேசிய கணக்காய்வு அலுவலகம் என்பன கணக்காய்வுகளை மேற்கொண்டு ஊழல்மோசடிகளை உறுதி செய்து அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தன. அந்த அறிக்கைகளின் அடிப்படையில் ஆரம்ப புலன் விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகளும் இடம்பெற்றன. அந்த விசாரணைகளின் போதும் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு, ஊழல் மோசடிகளில் ஈடுப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகையும் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவை எவற்றுக்கும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஊழல்மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தாங்களாகவே இடமாற்றம் பெற்று வேறு திணைக்களங்களுக்கு சென்றமை, பதவி உயர்வு பெற்றுச் சென்றமை என அவர்கள் அதிலிருந்து தப்பித்துக்கொண்டனர். இந்த நிலைமையே சுகாதாரத் துறையில் தொடர்ச்சியாக ஊழல்கள் இடம்பெறுகின்றமைக்குக் காரணமாகவுள்ளது என மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காஸாவில் இஸ்ரேல் மூர்க்கம்
# 70 அப்பாவிகள் படுகொலை!

டெல்அவிவ், ஜூலை 14

காஸாவின் கான் யூனிஸ் நகரில் உள்ள அகதிகள் முகாமில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் 71 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவத்தால், பாதுகாப்பு வளையம் என்று அறிவிக்கப்பட்டிருந்த பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல், சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட, முற்றுமுழுதான ஆதாரங்களைக் கொண்ட மறுதலிக்க முடியாத போர்க்குற்றம் என்று காஸாவில் செயற்படும் போர்க் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த 71 அப்பாவிப் பொதுமக்களைத் தவிர, மேலும் 300 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல்களுக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச எதிர்ப்புகளைத் தொடர்ந்து, இதை இலக்குத் தவறிய தாக்குதல் என்று அறிவித்துள்ள இஸ்ரேல், இது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.



கான் யூனிஸில் நடந்த இந்த கொடூரமான படுகொலையை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம், இது காசா பகுதியில் நிகழ்த்தப்படும் குற்றங்கள் மற்றும் படுகொலைகளின் ஆபத்தான அதிகரிப்பாகும். இந்தப் படுகொலைகள் போர் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவை என்று ஹமாஸ் அமைப்பு தனது கண்டனங்களைத் தெரிவித்துள்ளது. (ம)

# சிறைக் கண்காணிப்பாளருக்கு கொலை அச்சுறுத்தல்

கொழும்பு, ஜூலை 14

பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கைதிகளிடமிருந்து பல கையடக்கத் தொலைபேசிகளை கைப்பற்றிய சிறைச்சாலை கண்காணிப்பாளருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக பூஸா சிறைச்சாலையில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன்போது சிறைச்சாலையினுள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், சிறைச்சாலை கண்காணிப்பாளரின் தந்தைக்கு டுபாயிலிருந்து தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்த இனந்தெரியாத நபரொருவர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார். (ஒ-இ)

# 5,000 கொள்கலன்கள்; விடுவிக்க துரித ஏற்பாடு

சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக சிக்கியுள்ள 5 ஆயிரம் கொள்கலன்களை அகற்றுவதற்கான அவசரத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. அவை இந்த வார இறுதியில் விடுவிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்கள் முடிவெடுக்கும் போது அவர்களின் தொழில், நிறுவனம் மற்றும் தற்போதைய தேசிய நிலைமைக்கு முன்னுரிமை அளிப்பதுடன் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுவதையும் தீர்மானிக்க வேண்டும்.

வேலைநிறுத்தங்கள் தொழிற்சங்கங்களின் கடைசி முயற்சியாக இருக்க வேண்டுமே தவிர முதல் நடவடிக்கையாக இருக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கஞ்சாவுடன் கைதான மாணவனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒருவர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட அவர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்றையதினம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேற்படி மாணவனிடம் இருந்து போதை மாத்திரைகளும் ஒருதொகை கஞ்சாவும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# 'க்ளப் வசந்த' விவகாரம்: கைதானோர் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 14

க்ளப் வசந்தவைக் கொலை செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். வெலிபென்னவிலுள்ள வீடொன்றில் வைத்து நேற்றுமுன்தினம், மேல் மாகாண தெற்கு பிரிவு விசேட விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கைதான 3 சந்தேகநபர்களும் கொலைச் சம்பவத்துடன் தொடர்பில்லாதவர்கள் எனக் கருதி விசாரணைகளிலிருந்து விடுவிக்கப்பட் டதாக அவர் குறிப்பிட்டார். (ஒ-இ)

# கைதிகளைப் பார்வையிட திறந்தவெளி அனுமதி

கொழும்பு, ஜூலை 14

119 ஆவது சிறைச்சாலைகள் தினத்தை முன்னிட்டு சிறைக்கைதிகளைத் திறந்த வெளியில் சந்திப்பதற்கு அவர்களது உறவினர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கைதிகளைப் பார்வையிட வருபவர்கள் அவர்களுக்கான உணவு உள்ளிட்ட பொருள்களை வழங்குவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)


## மரண அறிவித்தல்

மலர்வு 23 . 10 . 1978



உதிர்வு 13 . 07 . 2024

### சிவசுப்பிரமணியம் கேதீஸ்வரன் (கேதன்)

1ம் கட்டை வீதி, கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் கேதீஸ்வரன் (கேதன்) அவர்கள் நேற்று (13.07.2024) சனிக்கிழமை காலமாகினார்.

அன்னார் கந்தையா சிவசுப்பிரமணியம் (அமரர்), கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், சிவசோதிலிங்கம் (நூலகர்), தவராசசிங்கம் (ஆசிரியர்), சற்குணமாலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஜெயந்தி, ஜெயரூபன், சிவதீசன் (சாரதி-இ.போ.ச) ஆகியோரின் சகோதரனும், சிவகுமாரி (சுகாதார ஆலோசகர்), சியாமளா, விக்கினராசா (தபாலக உதவியாளர்), கார்த்திகா ஆகியோரின் மைத்துனரும் யதுர்சனன், அபிசனன், டஜிதன், ஆருஷன் ஆகியோரின் சித்தப்பாவும், அர்வினின் பெரியப்பாவும் அபினேஷ், அபிஷாத் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2024) மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

1ம் கட்டை வீதி
கிராம்புவில், சாவகச்சேரி.

(CS 938) A-1

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரவை ஊக்குவித்தல்

கிளிநொச்சி, ஜூலை 14
முதலாம் தவணை முழுவதுமாக விடுமுறையின்றி பாடசாலைக்கு வருகை தந்த 32 மாணவர்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.
இதன்மூலம் மாணவர்களின் வரவு ஒழுங்கு கூடுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-25,13)

## பெரும் போகத்தில்

# 26 இலட்சம் கிலோ நெல் கொள்வனவு

கொழும்பு, ஜூலை 14



நாடளாவிய ரீதியில் காணப்படும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான நெற் களஞ்சியசாலைகள் மூலம் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் பெரும் போகத்தில் 26 இலட்சத்து 37 ஆயிரத்து 826 கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்துள்ளார்.
நாடளாவிய ரீதியில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு 353 களஞ்சியசாலைகள் காணப்படுகின்றன. அத்துடன் அரச துறையால் உபயோகிக்கப்படாத களஞ்சியசாலைகள் தனியாருக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)




# இருவார காலப் பயிற்சியை நிறைவுசெய்த ஊடகர்கள்

## இந்தியத் தூதரகம் அறிக்கை

கொழும்பு, ஜூலை 14
இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் இலங்கை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையைச் சேர்ந்த 29 பேருக்கான பயிற்சிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான பின்னூட்டல் கலந்துரையாடலில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா பங்கேற்றிருந்தாகவும் இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இந்திய அரசாங்கத்தின் வெளியுறவுத் துறை அமைச்சக அனுசரணையுடன் தெலுங்கானாவில் உள்ள சட்ட மற்றும் பொது நிர்வாகத் துறைகளுக்கான டொக்டர் எம்.சி.ஆர். மனித வள அபிவிருத்தி நிலையத்தில் ஊடக முகாமைத்துவம் தொடர்பாக 'ஐரெக்' ஒழுங்கமைத்த இருவாரகால பயிற்சியை இலங்கையைச் சேர்ந்த 29 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்த அதிகாரிகள் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளனர். இப்பயிற்சி நிறைவில் நாடு திரும்பியிருந்த இக்குழுவினரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் கலந்துரையாடும் அமர்வுக்காக சந்தித்திருந்தார்.
அச்சு, இலத்திரனியல், டிஜிற்றல் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் போன்ற சகல பரிமாணங்களிலும் காணப்படும் சமகால ஊடக செயன்முறைகள் தொடர்பான மேம்பட்ட திறன்கள் மற்றும் உள்ளீடுகள் குறித்து வலுவூட்டும் இலக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டமானது கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் இந்த மாதம் 7ஆம் திகதிவரை நடத்தப்பட்டிருந்தது. செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட ஊடக செல்நெறி மற்றும் தவறான செய்தி அறிக்கைகளுக்கு முகங்கொடுப்பதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பான கற்கைகளை உள்வாங்கியதாக இந்த பயிற்சி காணப்பட்டிருந்தது. நல்லாட்சியில் சமூக ஊடகங்களின் வகிபாகம் குறித்து அறிந்துகொண்ட இக்குழுவினர், தரவுகளை மையப்படுத்திய ஊடக அறிக்கையிடல் மற்றும் ஊடக நிறுவனங்களின் செய்திப் பிரிவுகளின் டிஜிற்றல் நிலைமாற்றம் தொடர்பான பயிற்சிகளையும் பெற்றிருந்தனர். அத்துடன் பிராந்தியத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த கலாசார மற்றும் மரபு ரீதியானஸ்தலங்கள் உட்பட பல இடங்களுக்கு மேற்கொண்ட களப் பயணங்கள் மூலமாகவும் இந்தப் பயிற்சிநெறியானது மேலும் வலுவடைந்தது, என்று அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## மாகாண கபடிப்போட்டிக்கு பாலிநகர் வித்தியாலய அணிகள் தெரிவு

முல்லைத்தீவு, ஜூலை 14
முல்லைத்தீவு - துணுக்காய் வலயத்தின் பாலிநகர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கபடி அணி வீரர்கள், மாகாணப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். 20 வயது ஆண்கள் பிரிவு 1 ஆம் இடத்தையும், 20 வயது பெண்கள் பிரிவு 1 ஆம் இடத்தையும், 17 வயது ஆண்கள் பிரிவு 1 ஆம் இடத்தையும், 17 வயது பெண்கள் பிரிவு 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ஒ-25,13)

## பொதுக்கூட்டம்

கொடிகாமம் ,ஜூலை 14
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவும் கல்லூரி வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-22-159)

## மாணவர்களுக்கான போட்டிகள்

யாழ்ப்பாணம் , ஜூலை 14
ஆடிப்பிறப்பு விழாவை முன்னிட்டுச் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் பாடசாலை மாணவர்களிடையேயான கட்டுரை மற்றும் பாடல் போட்டிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

ஆடிப்பிறப்புப் பாடல் போட்டியானது தரம் 3,4,5 மாணவர்களுக்கு பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறும்.

தரம் -6, 7,8 மாணவர்களிடையே 'நவாலியூர் சோமசுந்தரப் புலவர்' எனும் தலைப்பிலும், தரம் -9, 10,11 மாணவர்களிடையே 'ஆடிப்பிறப்புப் பண்டிகையும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும்' எனும் தலைப்பிலும் கட்டுரைப் போட்டி மாலை 3.30 மணியளவில் நடைபெறும்.

இந்த போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆடிப்பிறப்பு நிகழ்வில் வைத்து வழங்கப்படுமெனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-22-66)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
சி.எப்.சி.டி.(CFCD) நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான அமரர். சொக்கநாதன் யோகநாதனின் 3 ஆவது ஆண்டு நினைவாக குருதிக்கொடை முகாம் நிகழ்வு, நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 2 மணி வரை நடைபெறவுள்ளது. (ப-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பணவரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுடன் அனுசரித்துச் செல்லவும். இடையூறுகள் நீங்கும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வியாபாரம் வழக்கம் போல் நடைபெறும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படலாம். விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** மகிழ்ச்சியான நாள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அலைச்சல் உண்டாகும். சில சங்கடங்கள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

## கதிர்காமம் உற்சவத்தில் திருட்டுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 14
கதிர்காம உற்சவத்துக்கு வருகை தரும் பக்தர்களின் சொத்துகளைத் திருடும் கும்பல் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கதிர்காம உற்சவம் நடைபெறும் இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களிலிருந்து எரிபொருள் திருடப்படுவதால் அங்கு வருகை தரும் மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும், உற்சவத்துக்கு வருகை தரும் மக்களின் கையடக்கத் தொலைபேசிகள் திருடப்படுவதுடன் பல்கலைக்கழக மாணவியொருவரின் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்று திருடப்பட்டுள்ளது. (ஒ-இ)

## இலங்கைக்கு வருவதற்கு அஞ்சும் வெளிநாட்டவர்கள்

கொழும்பு, ஜூலை 14
இலங்கையில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை சமூக ஊடகங்களில் பார்க்கும்போது சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவதற்கு அச்சம் கொள்கின்றனர் என்று தேசிய நாமல் உயன அமைப்பின் ஸ்தாபகர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது சிகாகோ போன்று மாறியுள்ளது. யுக்திய நடவடிக்கை செயற்படுவதாக கூறப்படுகிறது.

ஆனால் மக்கள் எந்தவித அச்சமும் இல்லாமல் துப்பாக்கிகளை பயன்படுத்தி கொலை செய்கிறார்கள், அவர்கள் ஒருவரையொருவர் வெளிப்படையாக சுட்டுக்கொல்கிறார்கள்.

சுற்றுலா எங்கள் நாட்டில் ஒரு முக்கியமான தலைப்பாக மாறியுள்ளதுடன் நமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முக்கிய காரணியாக உள்ளது. சமூக ஊடகங்களில் இது போன்ற வன்முறை நடத்தைகளை பார்க்கும்போது, வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருகை தருவதற்கு பயப்படுகிறார்கள்.

எனவே இதனைத் தடுக்க நெறிமுறைகளை பேணுவதுடன் சட்டங்களைக் கொண்டுவருவதும் அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சுபீட்சமான இலங்கைக்கு...!

நாட்டின் தென்பகுதியில் வன்முறைகள் - அதுவும் மிகப்பெரும் வன்முறைகள் தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன. உச்சக்கட்டமாக அத்துருகிரிய பகுதியில் பச்சை குத்தும் நிலையமொன்றுக்குள் புகுந்த ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூடு தொடர்பான வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியானதையடுத்து, நாட்டின் குறிப்பாக தெற்கின் பாதுகாப்புத் தொடர்பில் மிகப்பெரும் வினாக் குறியே எஞ்சி நிற்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உள்ளிட்ட பல தரப்பினரும், இது தொடர்பான கருத்துகளை - நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையை நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் கனகச்சிதமாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

ஹெய்ட்டி, மாலைதீவு போன்று, இலங்கை ஒன்றும் இராணுவப் பலம் குறைந்த நாடல்ல. இன்னும் சொல்லப்போனால், சிவில் சமூகத்தின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிக அதிகமான விகிதாசாரத்தில் இராணுவத்தைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றாகவே இலங்கை இன்றளவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறிருந்தும் ஈஸ்டர் தாக்குதல், பாதாள உலகக் குழுக்களின் 'சுதந்திரமான செயற்பாடுகள்', நூற்றுக்கணக்கான வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்றால், இதன் அர்த்தம்தான் என்ன? விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படாத காலத்தில், வடக்கில் இராணுவக் குவிப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குத் தேவையாக இருந்தது. ஆனால், புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரும்கூட ஸ்ரீலங்கா இராணுவத்தின் வதிவிடமாகத்தான் வடக்கும் கிழக்கும் மாற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாக முல்லைத்தீவில் இராணுவ ஆக்கிரமிப்பும், இராணுவமயப்படுத்தலும் அதியுச்சமாகவே காணப்படுகின்றது. நாட்டின் பெருமளவு சிப்பாய்கள், வடக்கையும் கிழக்கையும் மையப்படுத்தி நிலைப்படுத்தப்பட்டிருப்பது எத்தனை பெரும் தோல்வியான சிந்தனை என்பதையே இந்தத் தாக்குதல்கள் எண்பிக்கின்றன.

வடக்கில் இடம்பெறும் நூல்வெளியீடுகளின் போதும், சிறுவர் வினோத உடைப் போட்டிகளின் போதும், மழலைகளின் விளையாட்டுக்கூடார அலங்காரங்களின்போதும் தமிழர் தாயகம் தொடர்பானதும் அல்லது விடுதலைப் போராட்டம் தொடர்பானதுமான கருத்தூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்று வாய்பிளந்தபடி நிற்கும் புலனாய்வுத்துறை, தெற்கில் மிகவும் சுதந்திரமாக இயங்கும் பெருத்த பெருச்சாளிகளை அடையாளப்படுத்துவதிலும், கைது செய்வதிலும் தோற்றுப்போயிருப்பது இயலாமையின் உச்சம். போதைப்பொருள் குற்றவாளிகளைக் கைதுசெய்வதையும், போதையற்ற -ஆயுதக் குழுக்களற்ற இலங்கையை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டுவரும் 'யுக்திய' சுற்றிவளைப்பு வெற்றிப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்று வாராவாரம் தெரிவிக்கும் பொலிஸ்மா அதிபர், இத்தனை மாதகால சுற்றிவளைப்புக்குப் பின்னரும், இதுபோன்று ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்கள் நாட்டின் குறைந்தபாடில்லையே அது ஏன்? என்ற கேள்விக்குப் பதில் வைத்திருக்கின்றாரா?

இலங்கையில் இருந்து ஆயுதக் குழுக்களும், பயங்கரவாதச் செயற்பாடுகளும் முற்றாகக் களையப்படவேண்டும் என்ற பெருவிருப்பம் அதிகாரக் கதிரைகளிடம் ஆத்மார்த்தமாக ஏற்பட்டிருந்தால், ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று இத்தனை வருடகால இடைவெளி அவ்வாறானதொரு சுபீட்சமான இலங்கைக்குப் போதாதா என்ன...?






# இனவாத முறையிலான கட்சிகளுக்குத் தடை!

## நீதி அமைச்சர் வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 14**

**இன அடிப்படையில் எமது நாட்டில் கட்சிகள் இருக்கும்வரை ஜனநாயகம் தலைதூக்க முடியாது. அதனால் ஜனநாயகம் தலைதூக்க வேண்டுமானால் இனவாத முறையில் கட்சி அமைப்பதைத் தடை செய்ய வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடிப்படைவாதம் எந்தவகையில் தலைதூக்கினாலும் அதனைத் தடுப்பது நாடாளுமன்றத்தின் கடமை. ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் ஐ.எஸ். ஐ.எஸ். தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக அன்று இருந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த தாக்குதல் இடம்பெற்றிருக்காது. இனவாதம், மதவாதம், அடிப்படைவாதம் இவை அனைத்தும் அரசியலுடன் ஒன்றிப்பிணைந்துள்ளன. இந்த முறைமை பிரித்தானியர் காலத்திலேயே எமக்கு விட்டுச்சென்றார்கள். தேர்தல் முறைமையே இதற்குக் காரணமாகும்.

இன அடிப்படையில் எமது நாட்டில் கட்சிகள் இருக்கும்வரை நாட்டில் ஜனநாயகம் தலைதூக்க முடியாது என்றார். (ம)

# தமிழ் மக்கள் கூட்டணியின் மாநாடு யாழ்ப்பாணத்தில்

கொழும்பு, ஜூலை 14

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் தலைவர் கே.ரி.கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஒ-66)

# தமிழ் இளைஞன் சுட்டுக்கொலை

றொரன்றோ, ஜூலை 14

கனடாவில் ஸ்காப்றோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் தமிழர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக றொரன்றோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிக்கரிங்கைச் சேர்ந்த 28 வயதான சுலக்சன் செல்வசிங்கம் என்பவரே கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-இ)

# ரணிலுக்கே ஆதரவு

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கும் என்று அக்கட்சி உறுப்பினரான அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் முடிவை கட்சி எடுக்கும். நிச்சயம் ஆதரவு வழங்கும் என உறுதியான நம்பிக்கை உள்ளது - என்றார். (ஒ-44)

# ரணில்-நிமால் பூசல் உச்சம்

கொழும்பு, ஜூலை 14

நிமால் லான்சாவின் தலைமையிலான மொட்டுக் கட்சிக் குழு மற்றும் ரணில் விக்கிரமசிங்க இடையே முரண்பாடுகள் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளன.

பஸில் ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்ச குடும்பத்துடன் ரணில் மேற்கொண்டு வரும் அரசியல் உறவு தொடர்பில் நிமால் லான்சா உள்ளிட்டவர்கள் தொடர்ந்தும் தமது எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.

இந்த நிலையில், கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற ரோஹித அபேகுணவர்த்தனவின் பேரணியில் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டமைக்கும் நிமால் லான்சா அணியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். (ச-இ)

## நாளை

15.07.2024

திங்கட்கிழமை - ஆனி - 31

சுபநேரம் : 12.00 - 01.30

ராகுகாலம் : 07.30 - 09.00

## நாளொரு நல்வார்த்தை

**ஒருவனிடம் துக்கமும் தூக்கமும் எப்போது குறையுமோ, அப்போதே அவன் மேதையாகிறான்.**

- காந்திஜி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 08 . 1951



மறைவு
10 . 07 . 2024

### செல்லப்பா யோகேந்திரன்

இல 50/3, 1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல 169 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா யோகேந்திரன் அவர்கள் கடந்த 10.07.2024 ம் திகதி இறைபதம் அடைந்துவிட்டார்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லப்பா-தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் நிறூஜாவின் அன்புக் கணவரும் மஞ்சயனினின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நரசிங்கமூர்த்தி-விமலேஸ்வரி, மனோகரன் மற்றும் நித்தியானந்தன் அன்னலட்சுமி, கிருஷ்ணமூர்த்தி - வரதலட்சுமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (14.07.2024) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**0779274551**
**0770812758**

தகவல்:
**மனைவி, மகன்**

(CS 941) V-1

## அமைதிக்கு அழைப்பு

ரஷ்யா - உக்ரைன் இடையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படுவதற்கான பேச்சுக்கு வருமாறு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

(ம)


## பணிப்பெண் தேவை

சம்பியன் வீதி, கொக்குவிலில் உள்ள வீடொன்றில் வயோதிபப் பெண் ஒருவரையும் குழந்தை ஒன்றையும் தங்கி நின்று பராமரிக்க பணிப்பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 899 5710**

## காணி விற்பனைக்கு

* யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
* யாழ். K.K.S. வீதி முகப்புடன் சிவன் கோயிலுக்கு அண்மையில் 140 அடி அகலமும் 140 அடி நீளமும் கொண்ட காணித் துண்டு உடன் விற்பனைக்கு.

தொடர்பு:-076 5799 693

## வேலை வாய்ப்பு

வட மாகாணத்தில் கட்டுமானத்துறையில் ஈடுபடும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. ஆர்வ முள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்

- மேசன்/ கூலியாட்கள்
- தச்சு வேலை செய்பவர் (கார்ப்பென்ரர்)

தொடர்புகளுக்கு:
**077 817 6393, 077 712 0945**

உங்கள் கனவுகளுக்கான பாதை......

**IELTS** offer fee 35000/=

**Diploma in English** offer fee 22000/=

ip IELTS POINT
More Details 0777-596148
15, Yarl Rd, (Off Stanly Rd ) Jaffna. Tel : 021-7284040.

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து 200M தெற்கில் காங்கேசன் துறை வீதியில் உள்ள உப்புமாவடி ஒழுங்கையில் 50M தூரத்தில் 4 பரப்பு 5.28 குழி காணி விற்பனைக்கு உண்டு விலை பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்பு: **077 608 7502**

## வேலை வாய்ப்பு

கட்டடநிர்மாண நிறுவனத்திற்கு (CIDA Grade C4) பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக் கோவையுடன் 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Electrical/MEP) (HND, NCT-Or Equivalent with Experience)
- தொழில் நுட்ப உத்தியோகத்தர் (HND, NCT-CIVIL-5 year Experience or Equivalent)
- Enviormentel Officer (Degree Relevant to Environmental)

Email: vacancynsc@gmail.com
WhatsApp: **077 712 0945**


## மரண அறிவித்தல்

### இராஜேஸ்வரன் இராஜதர்சன்

**(நாதஸ்வர வித்துவான்)**



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரன் இராஜதர்சன் (நாதஸ்வர வித்துவான்) அவர்கள் கடந்த (11.07.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் பிறேமராணி தம்பதியரின் செல்வப் புதல்வனும், பிரியதர்சினி சப்தஸ்வரன், தணிகன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஸ்ரீரஞ்சனியின் பாசமிகு கணவரும், சுபிட்ஷா, பூர்விகா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகிந்தன், ராகவர்த்தனி ஆகியோரின் மைத்துனரும், காருண்யன், அக்சயா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை வீதி நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:
**077 615 8424**

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அநுரவின் பரப்புரைக்கு கண்காணிப்புத் தீவிரம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க பங்கேற்கின்ற கூட்டங்களில் நவீன ரக சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக அவர் கலந்துகொள்கின்ற கூட்டங்களுக்கு வருபவர்களைக் கண்காணிக்கும் நோக்கில் இந்த நவீன தன்னியக்க சி.சி.ரி.வி. கமராக்கள் பல பொருத்தப்பட்டுள்ளன.

அதேவேளை கூட்டங்களுக்கு பைகளுடன் சமூகமளிப்பவர்கள் அழைக்கப்பட்டு விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றமை இடம்பெறுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## சிறுமி துஷ்பிரயோகம் பூசாரி கைதானார்

கொழும்பு, ஜூலை 14

14 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பூசாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மகளுக்கு அளவுக்கதிகமான கோபம் வருவதாகவும் வீட்டில் உள்ளவர்கள் சொல்வதை பிள்ளை கேட்பதில்லை எனவும் தெய்வக் குற்றமாக இருக்கலாம் என எண்ணி சிறுமியின் பெற்றோர் பூசாரியை அணுகியுள்ளனர். இதன்போது கடந்த மாதம் 3ஆம் திகதி சிறுமியின் வீட்டுக்கு வந்த பூசாரி அனைவரையும் வெளியே செல்லுமாறு கூறி சிறுமி தனிமையில் இருந்தபோது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## கெஹலியவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 14

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் 7 சந்தேகநபர்கள் ஜூலை 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்களை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸார் முற்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வடக்கில் உள்ள சிறுவர்களுக்கு

### தனது நடமாடும் பல் மருத்துவ சிகிச்சை திட்டத்தை ஆரம்பித்துள்ள க்ளோகார்ட்

தேசத்தின் மிகவும் நம்பகமான வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான, Hemas Consumer Brands நிறுவனத்தின் க்ளோகார்ட், சுகாதார மருத்துவ அதிகாரிகளுடன் (MOH) இணைந்து, பற் சூத்தைகள் அற்ற தேசத்தை உருவாக்குவதற்கான அதன் தொடர்ச்சியான திட்டமான, பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டலை முன்னெடுத்து வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 10 வருடங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இலங்கை முழுவதிலும் உள்ள சிறுவர்களுக்கு சிறந்த வாய்ச் சுகாதார பராமரிப்புக்கான வாய்ப்பினை வழங்குகின்றது. அவர்கள் அனைவரும் ஆரோக்கியமான புன்னகையை கொண்டிருப்பதற்கான வாய்ப்பை வழங்குவதில் க்ளோகார்ட் கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாகும்.

MOH மருத்துவர்களால் நடத்தப்படும், சிறந்த வாய்ச் சுகாதார நடைமுறைகள் தொடர்பான வலுவான அறிவூட்டல் நிகழ்வுகளை இந்த திட்டம் கொண்டுள்ளது. வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமான பழக்கங்களை குழந்தைகளிடம் ஏற்படுத்துவதற்கு, அறிவூட்டல் செயற்பாடு மிகவும் முக்கியமானதாகும். அது தவிர, இந்த திட்டமானது அனைத்து ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கும் இலவச பல் பரிசோதனைகளையும் முன்னெடுக்கின்றது. எந்தவொரு குழந்தையையும் விட்டுவிடாதிருப்பதை உறுதிப்படுத்த, இதில் மேலதிக பராமரிப்பு அவசியமான மாணவர்கள் உடனடியாக MOH இன் கவனிப்புக்காக பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

வாய்ச் சுகாதார பிரச்சினைகளை கண்டறிவது க்ளோகார்ட்டின் இத்திட்டத்தின் முக்கிய படியாகும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், குழந்தைகள் நீண்ட காலத்திற்கு சிறந்த வாய்ச் சுகாதார ஆரோக்கியத்தை பெறுவார்கள். இந்த திட்டமானது அவர்களது பிற்கால வாழ்க்கையில் கடுமையான பல் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு மிக முக்கியமானதாகும் என்பதோடு, ஒட்டுமொத்த சுகவாழ்வையும் அது மேம்படுத்துகிறது. இவ்வருடம், 5,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகளைச் சென்றடையும் நோக்கத்துடன், நாட்டின் வட பகுதியில் தனது முயற்சிகளை க்ளோகார்ட் விரிவுபடுத்தியுள்ளது. இந்த விரிவாக்கமானது, நாடு முழுவதும் உள்ள குழந்தைகளின் வாய்ச் சுகாதார ஆரோக்கியத்தில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துவதில் க்ளோகார்ட் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு ஒரு காரணமாகும்.

நீண்ட காலமாக க்ளோகார்ட் கொண்டுள்ள நற்பெயர் மற்றும் வாய்ச் சுகாதாரத் துறையில் அதன் நம்பகத்தன்மை ஆகியன MOH போன்ற நிறுவனங்களுடனான கூட்டாண்மை மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. சிறந்த வாய்ச் சுகாதாரத்தைப் பேணுவதற்கு அவசியமான அறிவு மற்றும் வளங்களை நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் பெறுவதை உறுதி செய்ய இந்த இரு நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன.

வாய்ச் சுகாதார பராமரிப்பு மூலம் இலங்கையர்களை வலுவூட்டுவதில் க்ளோகார்ட் முன்னெடுத்து வரும் தொடர்ச்சியான முயற்சிகள் யாவும், பற் சூத்தைகள் அற்ற தேசத்தை உருவாக்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை உண்மையாகப் பிரதிபலிக்கின்றன. விழிப்பூட்டல் திட்டங்கள், இலவச மருத்துவ சோதனைகள், முன்கூட்டிய தலையீடுகள் ஆகியவற்றின் மூலம், ஆரோக்கியமான எதிர்காலத்தை உறுதி செய்யத் தேவையான கருவிகள் மூலம் அடுத்த தலைமுறையை நிறுவனம் வலுவூட்டி வருகிறது.



## மலேசியாவில் விபசாரம்; இலங்கைப் பிரஜை கைது

கொழும்பு, ஜூலை 14

மலேசியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் இலங்கை பிரஜை ஒருவர் உட்பட 88 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 78 பெண்களும் பத்து ஆண்களும் மலேசிய குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-6)

# திடீர் மரண விசாரணை அதிகாரிகளை முஸ்லிம் பிரதேசத்தில் நியமிக்குக!

கொழும்பு, ஜூலை 14

ஜனாஸாக்களைத் தாமதமின்றி கையளிக்கும் வகையில், முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கு மேலதிக திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்து மூலம் விடுத்துள்ள வேண்டுகோள் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :

மரணம் சம்பவிக்கும்போது, முஸ்லிம்கள் தங்களது சமய வழிமுறைக்கமைய 24 மணித்தியாலங்களுக்குள் இறுதிச்சடங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இந்த நியமனங்களை மேற்கொள்ளுமாறு அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம் மக்களின் இறுதிக் கிரியைச் சடங்குகள் ஏனைய மத சடங்குகளைப் போலன்றி 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே, முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் மரபு ரீதியான கடமைகளை எளிதாக்கும் வகையில் அவர்கள் செறிந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்கவேண்டும்- என்றுள்ளது. (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையாகாமல் பொருளாதாரத்தை மீட்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் அறிவுரை

**கொழும்பு, ஜூலை 14**

**சகல பாடசாலை மாணவர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாகாது நடு நிலை சிந்தனையோடு செயற்பட வேண்டும். மதுபானம், போதைப்பொருள் மற்றும் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாவது நாகரிகமற்ற செயல் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள்என்பவற்றைகொழும்பு, திம்பிரிகஸ்யாய, சுசமயவர்தன ஆகிய பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று மக்கள் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், வருமானம் ஈட்டும் வழிகளிலும் மீளமுடியாத சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் சமூக விரோத நடவடிக்கைகள் கூட அதிகரித்து வருகின்றன. பிள்ளைகள் பெற்றோரைப் பின்பற்றுகிறார்கள். எனவே பெற்றோர்களும் மது உள்ளிட்ட போதைப் பொருள்களைத் தவிர்க்கவேண்டும். சரியானதைச் செய்து சரியான பாதையில் செல்லவேண்டும். தகவல் தொழில்நுட்பத்துறையில் பிரவேசித்து ஸ்மார்ட் கல்வியை முன்னெடுக்கவேண்டும். கல்வி எனும் பெறுமதிமிக்க வளத்தை எவராலும் ஒருபோதும் திருடமுடியாது. எனவே பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையும் நல்ல நாகரிக வாழ்க்கையும் அமைத்துக் கொடுக்க சகலரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஓ–25)




ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற
அம்மன் அருள் வாக்கு
தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
திருமதி வே. மோகனதாஸ்
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 071 241 1234, 021 221 1239
வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்
+94 712 411 234
(CS/881) J-1

### மணமகள் தேவை
பிரான்ஸ் இல் வதிவுடமை உள்ள இந்து கௌரவ (V) குலத்தைச்சேர்ந்த விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. திருமணமாகாத அல்லது விதவை அல்லது விவாகரத்து ஆகிய குழந்தைகள் இல்லாத 40 /45 வயதுள்ள நன்கு படித்த மணமகள் தேவை. குருகுலம் என்றாலும் பரவாயில்லை.
தொடர்புகளுக்கு:
இலங்கை தொலைபேசி (Phone) இலக்கம்
076 804 9077
France Phone தொலைபேசி Whatsapp இலக்கம்
0033 753 788 268
(Cs/28551) N-1

### இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை
தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்
Ts&Cs apply
Www.inaipa.com
(CS/841) J-1

### காணி விற்பனைக்கு
யாழ். கொக்குவில் சம்பியன் லேனில் புதிய வீட்டுடன் 2 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 985 6762
(CS/55641) J-1

### விற்பனைக்கு
TVS Scooty pep மோட்டார் சைக்கிள். Pioneer kit (Made in Japan) Set, நாய்க்கூடு ஒன்று விற்பனைக்கு உண்டு. விதானையார் வீதி. சுண்டிக்குளி.
077 623 8129
(CS/55669) J-1

### வீடு வாடகைக்கு
யாழ் இந்து. இந்து மகளிர் கல்லூரிகளுக்கு அருகில் அரசடி வீதியில் ஒரே வளவில் இரு வீடுகள் வாடகைக்குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது. சேரந்தோ / தனித்தோ வழங்கப்படும்.
தொடர்பு: 077 608 7687
(cs.55657) (N-1)

### காணி விற்பனைக்கு
G/S, J/88 யாழ். மாநகர சபை வண்ணார் பண்ணை மேற்கு இராசாளிக்குளம் கரை 01 ஒவ்வொரு நிலப்பரப்பாக பிரிக்கப்பட்ட 30 துண்டு ஆதனம் J/88, G/s பிரிவில் வசிப்பவர்களுக்கும் அயல் கிராம மக்களுக்கு. சொந்தக் காணி அற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (விலைக்குறைவு) 01 நிலப்பரப்பு 15 00 000/-
தொடர்பு:- 077 352 5670
(CS/918) J-1

### தேவை
A/L 2025 English Medium படிக்கும் மாணவனுக்கு I.C.T வீட்டிற்கு வந்து படிப்பிக்க ஆசிரியர் தேவை.
இடம் - வண்ணார்பண்ணை
076 363 3947
(CS/55632) J-1

### தேவை
யாழ். நகரில் இயங்கும் கருவாட்டுக்கடைக்கு சகல வேலைகளும் செய்யக்கூடிய, சிங்களம் பேசி வியாபாரம் செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.
077 222 8312
(CS/55660) J-1

"எங்களுடன் உலகெங்கும் பயணம் செய்யுங்கள்!"
யாழ். குடாநாட்டில் எமது ஊக்குவிப்புப் பட்டறை
**'டில்கோ சிட்டி ஹோட்டல்'**
யாழ்ப்பாணம்.

**மெட்ரோ லெய்ஸர் (METRO LEISURE) பிரைவேட் லிமிட்டெட்,**
(சகாமி ட்ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டென் இன் கிளை கம்பனி)
இலக்கம்: 403, 1 / 2 காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06

ஒழுங்கு செய்பவர்கள்: "சகாமி ட்ரவல் கிளப்" நிறைவேற்று குழு உறுப்பினர்கள்.

20.07.2024
10.00 - 4.30
மணிவரை

எமது சேவைகள்:-
* விமானப் பயணச் சீட்டுப் பதிவுகள்
* பயணக் காப்புறுதி
* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாக்கள்
* வீசா பெறுவதற்கு உதவி
* போக்குவரத்து
* குறுகிய காலச் சுற்றுலாக்கள் (குடும்பங்கள், வணிக நிலையங்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் போன்றவற்றுக்காக)

நாம் இதுவரை உலகெங்கிலுமுள்ள 24 நாடுகளுக்குச் சுற்றுப்பயணங்களை ஒழுங்குசெய்துள்ளோம்: ஜப்பான், கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, ஜோர்ஜியா, அஸர்பைஜான், ரஷ்யா, சைபீரியா, வியட்நாம், தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, கம்போடியா, இந்தியா, பிலிப்பைன்ஸ், டுபாய், துருக்கி, கென்யா, நியூசிலாந்து, எகிப்து, பிரேஸில், போல்டிக் நாடுகளான பின்லாந்து, நோர்வே, சுவீடன் மற்றும் ஐரோப்பிய நாடுகள்.

**சிறப்பு சுற்றுலாக்கள்: திருப்பதி, புத்த காயா மற்றும் வேளாங்கன்னி**

உலக நாடுகளுக்குச் சுற்றுலா செல்லும் வசதிகளை ஒழுங்குசெய்து வழங்குவதற்குரிய பயண முகவர்கள் யாழ்ப்பாணத்தில் அதிகம் இல்லை எனக்கருதி, எமது சந்தையை யாழ் குடாநாட்டில் ஆராய்ந்து விரிவுபடுத்துவதற்கும் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குமென, இங்குள்ள தனிப்பட்டவர்களையும், வணிக நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கு நாம் ஆர்வம் கொண்டுள்ளோம். அதனால், மெட்ரோ டுவர்ஸ்' பயண முகவர்களின் கிளையான சகாமி ட்ரவல்ஸ் நடத்தும் பயணப் பட்டறைக்கு வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணத்திலேயே மிகவும் சிறப்பான விலைக்கழிவுகளுடன் உங்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் எம்மால் ஏற்பாடு செய்து தரப்படும். அத்துடன் இன்னொரு நற்செய்தி! நாம் விரைவில் ஏற்பாடு செய்யவுள்ள ஜப்பான் சுற்றுலாவுக்கு, யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்காகவே தனிப்பட்ட முறையில், "முதலில் வருவோருக்கு விலைக்கழிவு" வழங்கவிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறிவிக்கிறோம்.

20 ஜூலை 2024 அன்று முற்பகல் 10.00 மணி முதல் மாலை 4.30 வரை, யாழ்ப்பாணம் "டில்கோ சிட்டி ஹோட்டல்" இல் இடம்பெறவுள்ள எமது ஊக்குவிப்பு நிகழ்ச்சிக்கு வருமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். முதலில் பதிவு செய்து, அன்றே முன்பணத்தையும் செலுத்தும் முதல் 25 பேருக்கு, தெரிவு செய்யப்பட்ட நாடுகளுக்குச் சுற்றுலா செல்வதற்கு 20% விலைக்கழிவினை வழங்கவுள்ளோம்.

இந்த பொன்னான வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள். எமது யாழ்ப்பாணப் பயண விழாவில் பங்குகொள்ளுங்கள்

தலைவர்,
சகாமி ட்ரவல் கிளப்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்
இந்தியன் செலக்ஷனின்
ஆடி மாத ஆடை தள்ளுபடி



திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள் சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்...

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12.07.2024 - 06.08.2024 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச்சுமை உயர்வால் போராட்டங்கள் வலுவடையும்

கொழும்பு, ஜுலை 14

வாழ்க்கைச் செலவை அரசாங்கம் குறைக்காவிட்டால் அரசுக்கு எதிரான போராட்டங்கள் மேலும் வலுவடைவதைத் தடுக்கமுடியாது. தேர்தல் இலக்குக்காகவே போலியான பொருளாதார மாற்றத்தை காட்ட அரசாங்கம் கடும் பிரயத்தனம் செய்கிறது - இவ்வாறு வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் 15 இலட்சம் அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக சம்பள உயர்வு கோரி தொழிற்சங்கப் போராட்டங்களை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்கின்றன. நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் துளியளவு கூட மீள எழவில்லை. மாறாக மக்கள் மீது திணிக்கப்பட்ட வரி விதிப்பின் வருமானமும் கடன் செலுத்துவதை அரசாங்கம் நிறுத்தியதன் காரணமாகவே வரிசையுகம் தற்காலிகமாகநிறுத்தப் பட்டுள்ளது.

பொருளாதாரத்தை மீட்டு விட்டோம் என பொய் கூறும் அரசாங்கத்துக்கு தொழிற்சங்கப் போராட்டங்கள் பேரிடியாக மாறியுள்ளன. தேர்தல் இலக்குக்காக போலியான பொருளாதார மாற்றத்தை காட்ட அரசாங்கம் கடும் பிரயத்தனம் செய்கிறது.

வாழ்க்கைச்செலவு அனைவரும் எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சினையாகும்.

தொழிற்சங்கப் போராட்டக்காரரின் கோரிக்கைகள் நியாயமாக இருந்தாலும் அவர்களுக்கான சம்பள உயர்வை ஈடு செய்ய அரசாங்கம் பொருள்களின் வரிகளை அதிகரிப்பதை தவிர வேறு வழி இல்லை.

எனவே அரசாங்கம் தொழிற்சங்கப் போராட்டங்களை ஓரளவு கட்டுப்படுத்தவும் ஏனைய மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைக்கவும் உடனடித் தீர்மானங் களை எடுக்கவேண்டும்.

இல்லாவிட்டால் போராட்டங்கள் வலுப்பெறுவதை தடுக்க முடியாது- என்றார்.

(ச-20)

**கிற்றார், ஓகன் வகுப்புக்கள் கற்றுக்கொடுக்கப்படும்**

கிற்றார் (Guitar), ஓகன் (Keyboad) வகுப்புக்கள் குறுகிய காலத்திற்குள் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 071 847 5086

**வேலையாள் தேவை**

A9 வீதி கொடிகாமத்தில் இயங்கும் பல்பொருள் வாணிப கடைக்கு வேலையாள் தேவை. தென்மராட்சியில் வசிப்பவர்.

(CR/42817) J-1

077 969 8914

**காணி விற்பனைக்கு**

Mt. Lavinia
82/5A, Galle Road,
காலி வீதியிலிருந்து 35 மீற்றர் தூரத்தில் 3வது கடைசி காணி
8.5 Perches
(தூய உறுதி)
வெற்றுக்காணி
1 Perch - 30 இலட்சம்
தரகர் தேவையில்லை

0777120349
0765792187
0770817961

**யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு உள்ளது**

ஒட்டுமடம் சந்தியில் இருந்து காரை நகருக்கு செல்லும் பிரதான வீதியோரமாக கல்லுண்டாய் வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் இரண்டு பக்கம் வீதிகளைக் கொண்ட **33 பரப்பு மேட்டு நிலம் விற்பனைக்கு உள்ளது.**

**விலை :- 1 பரப்பு 15 இலட்சம் பேரம் பேசத்தக்கது.**

(மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்).

(CR/42816) J-1

076 202 5812

**கடை விற்பனைக்கு**

**கிருலப்பனை**

சித்தார்த்த வீதியில் இரண்டு கடை, ஒரு அறை சமையலறை, குளியல் அறையுடன் விற்பனைக்கு உண்டு

0759263954
0755939845

**விற்பனைக்கு**

**மாவிட்டபுரம்**

வீமன்காமம் அருகில் 36 பரப்பு, 20 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு :- விமல்

0777348766

**மகளிருக்கான பயிற்சிகள்**

கிழமை நாள் அல்லது சனி ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன!!!

- ICING (ஐசிங்)
- SUGAR FLOWERS
- COOKERY
- HAIR DRESSING
- BEAUTICIAN COURSES

கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

☞ மேற்குறித்த பயிற்சிக்கு தேவையான பொருட்கள் இலவசம்

பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்

உடை தயாரித்தல் பயிற்சிகள்

☞ மேற்குறித்த பயிற்சிகளுக்கு தேவையான துணி மற்றும் பொருட்கள் தாமே கொண்டு வருதல் வேண்டும்

இடம் :- யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி,
(யாழ் போதனா வைத்தியசாலை பின்வீதி.)

தொடர்புகளுக்கு :-
077 711 0383
074 217 0383
(Whatsapp No)

(cr.42818) (N-1)

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு அருகாமையில் மயிலிட்டி உப. பிரதேச அலுவலகத்திற்கு இடையில் 200m தூரத்தில் பண்ணை அமைப்பதற்கு உகந்த 76 பரப்பு, 50 பரப்பு 2 காணிகள் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு : சிவராசன்

0778213472

**வேலையாட்கள் தேவை**

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 074 2110211

**வெளிநாடு பயணம்**

- UK
- CANADA
- NEW ZEALAND
- AUSTRALIA
- DUBAI
- MALTA
- GERMANY
- POLAND

- STUDENT VISA
- VISIT VISA
- BUSINESS VISA

GET MORE DETAILS
+94 76 979 0622
+94 76 770 5394

HYBRID VISA CENTRE
NO:6-1/1, 37TH LANE, WELLAWATTE, COLOMBO 06
TEL NO: 0112 362 925

**வேலையாட்கள் தேவை**

வவுனியாவில் அமைந்துள்ள உணவகத்திற்கு பின்வரும் **பணியாளர்கள் தேவை.**

- றொட்டி, சிற்றுண்டி தயாரிப்பாளர்.
- காசாளர்.
- உணவு பரிமாறுபவர்.
- அப்பம் தயாரிப்பாளர்.

(CS/28428) J-1

தொடர்பு:- 077 604 0373

**CANADA VISA**

Canada student tourist visit visa hotel booking bank balance working Leave letter Canada sponsor service

+14313062452
+94777158456

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 06 - 1958



மறைவு 10 - 07 - 2024

### திருச்செல்வி மன்மதராசா

(இளைப்பாறிய தொலைத்தொடர்புகள் திணைக்கள உத்தியோகத்தர்)

கொக்குவில் பூநாறிமரத்தடியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருச்செல்வி மன்மதராசா கடந்த 10.07.2024 அன்று பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியும் கொக்குவில் பூநாறிமரத்தடியை சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சற்குணவதி தம்பதியரின் இளைய புதல்வியும், கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற கனகசபை மற்றும் வடிவேஸ்வரி தம்பதியரின் மருமகளும், மன்மதராசா (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், தீப்தி (பிரான்ஸ்), திலீப் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், விந்தூரியன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமியாரும், திவ்வியனின் (பிரான்ஸ்) அன்பு அம்மம்மாவும், சற்குணலிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்), செம்மனச்செல்வி, ஜெயராஜலிங்கம் (முன்னாள் அரச நில அளவையாளர்), மகாலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான றோஸ், தருமராசா மற்றும் ஜெகஜனனி, மஞ்சுளா ஆகியோரின் மைத்துனியும், ஆஷாப்பிரியா (கனடா), சுரேந்திரன் (கனடா), வாகீசன், வர்ஷா ஆகியோரின் சின்னமாமியும், காலஞ்சென்ற ஆதவன் மற்றும் அகரன் ஆகியோரின் பேர்த்தியும், ஜெகதீஸ்வரி அவர்களின் அண்ணியும், சத்தியநாதன் அவர்களின் மைத்துனியும், காயத்திரி, கார்த்திகா, கார்னிகா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் எதிர்வரம் (18-07-2024) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உறவினர்கள் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள் சற்குணலிங்கம் (071 523 4366)
செம்மனச்செல்வி (077 687 4646)
ஜெயராஜலிங்கம் (076 575 3518)

(cs 55671) (N-1)

## மரண அறிவித்தல்



### இராசரத்தினம் தேவராசா (சின்ராசு)

கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பத்தானை வீதி, தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தேவராசா அவர்கள் நேற்று (13.07.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் கிருபானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சொர்ணமலர், குகானந்தன் (உப அஞ்சல் அலுவலகம்- கோண்டாவில்), சோபனா, கஜேன் (அஞ்சல் அலுவலகம் - கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் சுபத்திராதேவி (பிரதேச சபை, புத்தூர்), Dr. சாஜிபானு (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷ்யந்தி - உமாகாந், விதுஷன் - சங்கீதா, தனுஜா, கேசிகா, லக்சிகா, ஜினோஷ், ஹரினிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், சங்கவி, ராகவன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(CS 938) A-1

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் பாதை இணைப்பு

கடந்த ஜனவரி மாதம் புனரமைப்பு பணிகளுக்காக மூடப்பட்ட மாஹோ – அநுராதபுரம் இடையிலான ரயில் பாதைப்பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

தற்போது புதிய ரயில் பாதை மாஹோ ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள பழைய ரயில் பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஒ–இ)

## 3 கொலைச் சம்பவங்கள்

நாட்டில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் மூன்று கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஒ- இ)


### காணி குத்தகைக்கு

- இடம் :- புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு.
- அளவு :- 15 ஏக்கர் (சிறு பகுதியாகவும் பெறலாம்.

கிணறு, மின்சார வசதி உண்டு. பயிர்ச் செய்கை, விலங்கு வளர்ப்பு, பிறதொழில் முயற்சிக்கு உகந்தது.

(CS/28427) J-1

தொடர்பு:- 076 614 1967

### மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்குத் தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்.

077 334 1281

### THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிலையம் - சங்கானை.

O/L, A/L கலை, வர்த்தகம் மற்றும் ஆங்கிலக் கல்வி (SPOKEN), சிறந்த ஆசிரியர்கள் குழாம்.

குபேரன் கட்டட மாடி, சங்கானை.

(CS/55666) J-1

TEL- 077 675 1649

### Exciting Job Opportunity for Accountancy Professionals! Join a leading UK Accounting Firm now expanding its team in Jaffna!

We established our Jaffna branch some time ago and are recruiting additional staffs to enhance our dynamic team.

**Candidate Educational Qualifications and Skills Required:**

- An undergraduate degree in the accountancy field.
- Partial qualifications in AAT, CIMA, ACCA, or a related professional field.
- Experience in a UK accountancy practice is desirable.
- Proficiency in both English and Tamil languages.



**Wages** : We offer a competitive salary package based on qualifications and experience.
**Office Location** : Jaffna,Sri Lanka
**Working Hours** : **Monday to Friday - Shifts available: 10 am to 7 pm or 12 pm to 9 pm.**
**How to Apply** : Please send your CV and cover letter to agaaccrecruitments@gmail.com
**Application Deadline** : 28th July 2024

(CS/915) J-1


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



கடந்த 14.06.2024 வெள்ளிக்கிழமை
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் தியாகராஜா நேசநாதன்

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இன்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், பதாகைகள், அஞ்சலிப்பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர் களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


**392/2, நாவலர் வீதி,**
**நல்லூர்,**
**(கைலாசபிள்ளையார் கோவிலடி)**
**021 222 7905**

**குடும்பத்தினர்**

(cs.55648) (N-1)

## மரண அறிவித்தல்

மலர்வு 25 . 02 . 1956



உதிர்வு 13 . 07 . 2024

### பொன்னம்பலம் இந்திரலிங்கம் (அத்தான்)

மயிலங்கூடலைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியினை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது சிறுவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இந்திரலிங்கம் நேற்று (13.07.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை பொன்னம்பலம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான நடராசா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவி (ரஞ்சி) யின் அன்புக் கணவரும், சஞ்சீவி (ஜீவா), ரேணுகா, விதுசாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூதரன் (சுவிஸ்), தயாசுகாளன் (பிரான்ஸ்), பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், அதிர், அயூன், அஜய், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும், இந்திராணி, செல்வராணி (வவா), மனோகரன் (ரஞ்சன்), ரஞ்சினி, வசந்தகுமாரி, ஸ்ரீகுமார், உதயகுமார், ஜெயக்குமாரி ஆகியோரின் பாசம்மிக்க மூத்த சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராயிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**சிறுவிளான்,**
**இளவாலை.**

**குமார் (மருமகன்) : 077 873 7255**
**கோபி (பெறாமகன்) : 077 376 0929**

(CS/55669) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 10 . 1948



இறப்பு 12 . 07 . 2024

### சுமதினி A .K இராசையா (பபி)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வவுனியா மற்றும் சிங்கப்பூரை வதிவிடமாகவும் கொண்ட சுமதினி இராசையா நேற்றுமுன்தினம் (12.07.2024) வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (D R O) - வள்ளிநாயகி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான அம்பலம் கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் A.K. இராசையாவின் அன்பு மனைவியும், துஷ்யந்தன் (பாபு - கொழும்பு), துஷ்யந்தி (கோஷி - மெல்பேண), சுதர்சன் (சுதா – வவுனியா), குமணரூபன் - சிங்கப்பூர் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தி, அமரேந்திரா, றோசா, தானியா ஆகியோரின் மாமியாரும், பிரதீகா, டிலானிகா, நர்மதன், நவீன், திவ்யா, அபிநயா, தீபக், மக்லரன்ஸ், பெராரன்ஸ், ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலஞ்சென்றவர்களான நந்தினி, ஸ்ரீகாந்தா மற்றும் நளாயினி, சாந்தினி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான A.K. சுந்தரம், A.K. சாபாரத்தினம், நாகரத்தினம், காலஞ்சென்ற A.K. துரைரட்ணம், காலஞ்சென்ற கிரிதரன், காலஞ்சென்ற நளாயினி மற்றும் நீலகண்டன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-07-2024) ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
துஷ்யந்தன் (பாபு ) மகன் - +94 714 425 214
சுதர்சன் (சுதா) மகன் - +94 778 784 889

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 42814) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பிறப்பு வீதம் வீழ்ச்சி; குறைந்துவரும் பிக்குமார்

## அமைச்சர் விதுர தெரிவிப்பு!

கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் பிறப்பு வீதம் குறைந்துள்ளமையால் பிக்குமாரின் எண்ணிக்கையும் குறைந்துள்ளதாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஒன்று, இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதையே பெற்றோர் விரும்புகின்றனர். இதனால் தமது பிள்ளைகள் பிக்குமாராக வருவதைப் பெற்றோர் விரும்பவில்லை.

இலங்கையில் தற்போது 42 ஆயிரத்து 122 பதிவு செய்யப்பட்ட பிக்குமார் இருப்பதாகவும் 12 ஆயிரத்து 235 விகாரைகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலகவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே விதுர விக்கிரமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ப-6)

சுகாதாரச் சீர்கேடு

# யாழ் . நகரத்திலிலுள்ள உணவகங்களுக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாண நகரப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர் சோதனையில் அந்த உணவகங்கள் சிக்கின.

அவற்றுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது உணவகத்தில் காணப்படும் சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்துக்கு 'சீல்' வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ச-20)

உற்சாகமாய் இருப்போம்
நீரிழிவு நோயை தடுப்போம்
GINSOMIN®




சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

Ginsomin இன் பிரதான கூறான அசல் கொரியன் பன்க்ஸ் ஜின்செங் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

MEGA We care
For Your Wellness
www.megawecare.lk

077 34 100 71
011 43 753 64

YouTube Ginsomin Srilanka

இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited



# யாழ். கோட்டையில் தொல்லியல் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணக் கோட்டையில் 134 வருட தொல்லியல் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உதவிப் பணிப்பாளர் ய.ஏ பந்துலஜீவ தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகப் பிரதிப் பிரதம செயலாளர் க.ஈஸ்வரராஜா, சிறப்பு விருந்தினர்களாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரி இ.நடராஜன், வாழ்நாள் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், வடமாகாண சுற்றுலாப் பணியகப் பணிப்பாளர் திருமதி க.காஞ்சனா, வரலாற்றுத்துறைத் தலைவர் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோர் பங்குபற்றினர். நிகழ்வில் சமூக மட்டத்தில் மரபுரிமை பாதுகாப்பு தொடர்பாக பணியாற்றிவரும் லக்ஷ்மன் சந்தன மைத்திரிபால, இ.சந்திரகுமார், இ.ரமேஷ் ஆகியோர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணக் கோட்டை பற்றிய புகைப்படத் தொகுதியும் வெளியிடப்பட்டது. (ச-125)




# ஒஸ்திரியாவில் மோடிக்கு 'வந்தே மாதரம்' வரவேற்பு

ஒஸ்திரியா ஜூலை 14

இந்தியப் பிரதமர் மோடி கடந்த புதன்கிழமை ஒஸ்திரியாவுக்கு விஜயம் மேற்கொண்டார். அவர் தங்கியிருந்த ரிட்ஸ் கார்ல்டன் விடுதியில் இந்திய தேசிய கீதத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. மோடி தங்கியிருந்த மேற்படி விடுதியில் வீயென்னா பலக்லைக்கழக இசைக்குழுவினரின் ஏற்பாட்டில் "வந்தே மாதரம்" இசைக்கப்பட்டது. இதன்போது, பிரதமர் மோடி தேசிய கீதத்துக்குரிய மரியாதையை செலுத்தினார்.

1983 ஆம் ஆண்டு இந்திரா காந்தியின் விஜயத்தின் பின்னர் இந்தியப்பிரதமர் ஒருவர் ஒஸ்திரியாவுக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும். (ஓ-25,6)

# விமானியை தாக்கியவர் கைது

பாரிஸ், ஜூலை 14

விமானியின் ஆசனத்தில் அமர்ந்து தொழ முற்பட்ட இஸ்லாமியர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் பாரிஸில் இடம்பெற்றுள்ளது.

பாரிஸிலிருந்து துனிசியா நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானத்தில் பயணம் செய்த இஸ்லாமியர் ஒருவர், விமானியின் ஆசனத்தில் அமர்ந்து தொழ முற்பட்டபோது விமானி அவரைத் தடுத்துள்ளார். இதனையடுத்து, இஸ்லாமிய நபர் விமானியைத் தாக்கியுள்ளார். இதனால் விமானம் துனிசியாவுக்குச் செல்லாமல் பாரிஸில் தரையிறக்கப்பட்டது. இந்நிலையில், பாரிஸ் பொலிஸார் தாக்குதல் நடத்திய இஸ்லாமியரைக் கைதுசெய்துள்ளனர். (ப-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.ம.சக்தியில்

# பொன்சேகாவின் பதவிகள் பறிப்பு

கொழும்பு, ஜூலை 14

ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

கட்சித் தலைமை மீதான விமர்சனம், கட்சித் தீர்மானத்துக்கு எதிரான செயற்பாடுகள், ஆளுங்கட்சியுடனான உறவு உள்ளிட்ட காரணங்களைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தின் போது ஜனாதிபதி ரணிலை ஆதரித்து அவருடன் பொன்சேகா மேடையேறவுள்ளார் எனக் கருதப்படும் பின்னணியிலேயே, ஐக்கிய மக்கள் சக்தியில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பதவிகள் பறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-25-44)

தமிழரசுக் கட்சியின்

# நாடாளுமன்றத் தலைமையை செல்வம் எம்.பி.க்கு வழங்குக

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து!

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி செல்வம் அடைக்கலநாதனுக்கே வழங்கப்படவேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செல்வம் எம்.பி.க்குத்தான் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைமை வழங்கப்படவேண்டும். ஆரம்பத்தில் இந்த விடயத்துக்கு சில தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சம்மதம் வெளியிட்டிருந்தபோதும் தற்போது கட்சிக்குள் இதுதொடர்பாகப் பிரச்சினைகள் உருவாகியிருப்பதாகத் தெரிகிறது. பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு விரைவில் அவர்கள் சரியான தொரு முடிவை மேற்கொள்வார்கள் என நம்புகின்றோம் - என்றார். (ம-66)

### சீன...

மஹிந்த ராஜபக்சகளின் அமைச்சரவையில் முக்கியமான இடத்தை வகித்தவர் தினேஷ் குணவர்த்தன. வடக்கின் வசந்தம் என்று அன்று கூறியவர்கள் இன்று சீன அரசின் மூலம் வடக்கின் வசந்தத்தை ஏற்படுத்தப் பார்க்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க - மைத்திரிபால சிறிசேன இணைந்து ஆட்சியமைத்திருந்த காலத்தில், தினேஷ் குணவர்த்தன உட்பட பலர் ரணிலை பட்டப்பகலில் கொள்ளையிட்ட கள்வர் என்றனர். இன்று அவர் ரணிலின் காலை நக்கிப் பிரதமராக இருக்கின்றார். இவர் கலந்துகொண்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்க ளில் எந்தவொரு தீர்க்கமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இன்னும் இரண்டு மாதங்களில் இந்த அரசாங்கம் முடிவடையப்போகிறது. இனித் தேர்தல்காலம் என்பதால், அரிசியை வைத்தும் மக்களிடம் செல்ல வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 3 இலட்சத்து 70 ஆயிரம் கிலோ அரிசி கொண்டுவரப்பட்டுள்ளது. 20 கிலோ நிறையின் பிரகாரம் 18 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்குவார்கள். அந்த அரசி உண்மையிலே உண்பதற்குத் தகுதியானதா என்ற பிரச்சினையும் உள்ளது. யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைக் குடும்பங்கள் உள்ளன. அப்படியெனில், இந்த அரசி வழங்கும் திட்டம் அனைவருக்குமான திட்டமல்ல.

இந்த அரிசிப் பொட்டலங்களை தமிழ் எம்.பி.க்களின் தலையில் கட்டி தமிழ் மக்களுக்கு நூதனமாக அமைச்சர் டக்ளஸ் வழங்கியுள்ளார். இதிலிருந்து என்ன தெரிகிறது? இவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. தினேஷ் குணவர்த்தன இங்கு வரும் பொழுது காணி, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், உரிமை எனக் குரல்கொடுக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பி.க்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்துள்ளனர்.

அனைத்துத் துறையிலும் முன்னேறிய, கல்வியறிவுடைய வடக்கு மக்களை சீன அரசியைக் கொடுத்து ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் அரசாங்கம் செயற்படுகின்றது. இவர்களின் விளையாட்டு இன்னும் இரண்டு மாதங்கள்தான். ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும். அதன் பின்னர் டக்ளஸ் அமைச்சுப் பதவியில் இருக்கப்போவதில்லை - என்றார். (அ-ம-125-20)

### தடை கோரிய...

"19ஆவது அரசமைப்புத் திருத்தம் உரிய வகையில் நிறைவேற்றப்படாமையால் பொதுமக்களின் கருத்துகளை உள்வாங்கி அது நிறைவேற்றப்படும்வரை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக்கூடாது. அவ்வாறு நடத்தப்படுவது அரசமைப்புக்கு முரணானது என்று உத்தரவிடவேண்டும்" என்று சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன என்பவர் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுமீதான விசாரணைகளே நாளை இடம்பெறவுள்ளது. பிரதம நீதியரசர் தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமின் முன்னிலையில் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

19ஆவது திருத்தம் பொதுமக்கள் கருத்து கணிப்புக்கு உட்படுத்தப்படவேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தீர்ப்பு வழங்கியபோதிலும் இதுவரை மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் அது அங்கீகரிக்கப்படவில்லை. ஆதலால், ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான காலவரையறைகளில் முரணான நிலைப்பாடு நிலவுவதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்துமாறு தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவொன்று முன்னதாகத் தள்ளுபடி செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது இந்த வழக்கு நாளை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

### சூரிய...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சூரியசக்தி மின்னிணைப்பு வழங்கலில் தொடர்ச்சியான முறைகேடுகள் இடம்பெறுவதாக, ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளதைத்

தொடர்ந்தே, இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுமாறு வலுசக்தி அமைச்சுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிராந்திய மின் இணைப்புப் பொறியியலாளர் காரியாலயத்தில் சூரியசக்தி இணைப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும்போது முறைகேடான சிலருக்கு அனுமதிகள் வழங்கப்படுவதாகவும், மிக நீண்டகாலமாக விண்ணப்பித்தவர்களின் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வேண்டுமென்றே கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றும், இவை குறித்து மின்சாரசபையின் பொது முகாமையாளருக்கு முறைப்பாடு செய்த வாடிக்கையாளர்கள் பழிவாங்கப்படுவதாகவும் ஜனாதிபதியின் குறைகேள் அதிகாரிக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்தே குறித்த விடயம் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொண்டு, அறிக்கையிடுமாறு ஜனாதிபதியின் செயலாளரால் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

### பேருந்துக்குள்...

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 வீதியில் அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு முன்பாக கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்திலேயே குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கைதடிப் பகுதியில் பேருந்தில் ஏறிய இருவர் அரியாலையில் இறங்கியபோது நடத்துநருடன் முரண்பட்டுள்ளனர். இதில் நியாயம் கேட்கச்சென்ற சாரதி மற்றும் பயணி ஒருவர் மீதே கத்திவெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-20)

### காணாமலாக்க...

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக்கோரி அவர்களின் உறவுகளால் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா பிரதான தபால்நிலையத்துக்கு அருகாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டத்தின் 2 ஆயிரத்து 700ஆவது நாளை முன்னிட்டும் இந்தப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

காணாமலாக்கப்பட்ட எங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும், காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் சர்வதேச நீதியே தேவை, சர்வதேச சமூகம் எமக்கான நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குரலெழுப்பினார்கள். (அ-ம-66)

### மூதாட்டியைத்...

கொடிகாமம் பகுதியில் உள்ள வீடொன்றில் 62 வயதான மூதாட்டியை, வளவினைத் துப்புரவுப்படுத்துமாறு மிரட்டியபடி அவரது மைத்துனி தாக்கிய வீடியோ சமூக ஊடகங்களில் நேற்றுப் பரவியது. இந்த விடயம் தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டது. இதையடுத்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், மூதாட்டியைக் கண்மூடித்தனமாகத் தாக்கிய பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-ம-125-27-20)


### அச்சுப்...

லேயே, தேர்தல் அச்சுப் பணிகளுக்கான செலவு தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும், வாக்குச் சீட்டின் அளவைப் பொறுத்து இந்தத் தொகையில் மாற்றம் ஏற்படலாம். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இதுதொடர்பான பத்திரங்கள் அச்சிடப்படும். தேர்தலில் அதிகாரிகளின் கடமைகளுக்குத் தேவையான மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிவங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

### குடைசாய்ந்த...

பெற்றோல் நிரப்பிவிட்டுத் திரும்பிய போதே ஓட்டோ இவ்வாறு விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஓட்டோ கவிழ்ந்து விபத்துக்குள்ளான போது, எரிபொருள் தாங்கியில் இருந்து பெற்றோல் வெளியேறியமையே ஓட்டோ முற்றாகத் தீக்கிரையாகக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100-27-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு விற்பனை: மாட்டினார் பெண்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தொடர்ச்சியான கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் நேற்றுச் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவுக்கு கீழ் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கபெற்ற இரகசிய தகவலில் அடிப்படையில் சுழிபுரம் பகுதியில் உள்ள வீடொன்றை பொலிஸார் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

அதன்போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 10 போத்தல் கசிப்பை பொலிஸார் மீட்டதுடன் அதனை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் 47 வயதான பெண்ணும் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரையும் மீட்கப்பட்ட கசிப்பும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அதேவேளை குறித்த பெண் ஏற்கனவே கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றத்தில் கைதாகி நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26-20-27-23-66)

# கிரிக்கெட் போட்டி மாதகலில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 14

மாதகல் விநாயகர் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் 'மாதகல் பெரும் சமர்' என வர்ணிக்கப்படும் 'வீரா' மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாதகல் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் விநாயகர் விளையாட்டுக் கழகத் தலைவர் சி.ஞானபண்டிதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் உரும்பிராய் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

நிகழ்வில் மாதகல் நலன்புரிச் சங்கத் தலைவர் வி.சிற்றம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

# இலத்திரனியல் மயமாகும் நெற்காணிகள் பதிவுகள்

## உரிமையாளர்கள் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

'ஜியோகோவியா' எனப்படும் இலத்திரனியல் மயமாக்கல் திட்டத்தின் கீழ் நெற்காணி பதிவேடுகளை மேற்கொள்வதில் காணி உரிமையாளர்கள் பின்னடிப்பதாக யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் நெற்காணிகளை 'ஜிஜோகொவியா' திட்டத்தின் கீழ் நெற்பரப்புக் காணிகள் ஜி.பி.எஸ். மூலம் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக யாழ். மாவட்டத்தில் 95 சதவிகிதமான காணிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதன் உரிமையாளர்கள் 50 சதவிகிதத்துக்குள்ளானவர்களே இந்தத் திட்டத்தின்கீழ் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 50 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட உரிமையாளர்கள் யாழ். மாவட்டத்தில் இதுவரையில் குறித்த திட்டத்தின் கீழ் காணிகளை அடையாளப்படுத்தவில்லை.

எதிர்வரும் காலங்களில் அவர்களுடைய நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே நெற்பயிர் செய்கையாளர்கள் உடனடியாக தமது காணிகளை அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கமநல அபிவிருத்தி நிலையத்தில் பதிவு செய்யுமாறு யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-125)

# கௌரவிப்புக்கு விண்ணப்பிக்குக

தென்மராட்சிக் கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தால் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக் கழகம் தெரிவான மாணவர்களைத் தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றியம் கௌரவிக்கவுள்ளது.

தகுதியை உடைய தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ச-66)


**காணி விற்பனைக்கு**

நல்லூர் செம்மணி வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:
077 257 8627, 077 887 5945

**விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) தேவை.**

இலங்கையின் பிரபல்யமான பிஸ்கட் (Biscut) நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) தேவை.
வயது எல்லை 25 தொடக்கம் 45 வரை.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.
யாழ் நகர் மற்றும் மானிப்பாய் நகரை அண்மித்து இருத்தல் விரும்பத்தக்கது.
(CS/55672) J-1
075 466 5555, 077 421 4996, 077 078 3289

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடிப் பகுதியில் நிலப்பரப்பு-110 அளவுள்ள காணி விற்பனைக்கு உண்டு.
- A-9 பிரதானவீதியில் இருந்து 1 1/2Km தூரம்
- 60 வருடத்திற்கு மேற்பட்ட தோம்பு வரலாற்றைக் கொண்டது
- சுற்றுலாத் தலங்கள், ஹோட்டேல்கள், அமைக்க மற்றும் தென்னைபயிர் செய்கைக்கு உகந்தது.
- பிரித்துக் கொடுக்கப்படமாட்டாது.
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- பரப்பு ஒன்றின் விலை ரூபா 375000 மட்டுமே

(காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை பார்வையிடலாம்)
(CS 935 V-1)
தொடர்புகளுக்கு:
076 209 7034

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 73 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 2வது காணி.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2இலட்சம்.
- தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம்:
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.
தொடர்புகளுக்கு : ஜெயம்
(CS/912) J-1
077 814 7389, 077 986 5457

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
(CS/55548) J-1
தொடர்புகளுக்கு:
074 173 7684




**கமராக்கள் தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு நல்ல நிலையில் உள்ள கமராக்கள் உடன் தேவை.
தொடர்பு:- 077 120 9998

**வேலைக்கு ஆள் தேவை**

சன்வே மொத்த சில்லறை வியாபார நிலையத்திற்கு பொதி செய்வதற்கு ஆள் தேவை. சம்பளம்-40000 ரூபாய்.
28, பலாலி வீதி திருநெல்வேலி.
தொடர்புகளுக்கு:
077 991 4945

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிப ஆண் ஒருவரைப் பராமரிப்பதற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணியாளர் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS/55670) J-1
078 731 1049, 070 467 4672

**கடை வாடகைக்கு உண்டு**

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் A9 பாதையோரமாக சகல வசதிகளுடனும் கூடிய புதிய இயங்கு நிலையிலுள்ள உணவகம் வாடகைக்கு உண்டு.
(CS/55673) J-1
தொடர்பு:- 077 926 5447

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலியில் வீடாகவோ அல்லது அறைகளாகவோ பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது தொழில் புரிவோருக்கு வழங்கப்படும்.
075 233 1615, 071 233 1684


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

றோயல் பல் சிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புக்கு: 076 8788148, 074 155 1427

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நட்சத்திர சுற்றுலா விடுதிக்கு சகல துறைக்கும் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம். உணவு மற்றும் மேலதிக சேவைக்கட்டணமும் வழங்கப்படும்.

மின்னஞ்சல் :- aom@thinnaifarms.com

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்.

(CS/917) J-1

**076 389 4995**

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1984 ம் ஆண்டு பிறந்த திருமணப் பதிவுடன் விவாகரத்தான அரச உத்தியோக மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

(CS/55667) J-1

**077 335 0298**

## காணி விற்பனைக்கு

யாழ். கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் 3 1/4 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 910 2148, 077 582 5094, 077 833 2909

## காணி விற்பனைக்கு

வலிகாமம் மேற்கு, விளான் சந்தியில் இருந்து சேந்தாங்குளம் வீதி செல்லும் 1/4 Km தூரம், பிரதான வீதியில் 22 பரப்புக் காணியும் அதில் உள்ள 2 பழைய வீடுகளும் விற்பனைக்குண்டு. தரகர்கள் தொடர்புகொள்ளவேண்டாம்.

தொடர்பு: **070 532 8226**
**075 810 6917**

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி பெரிய பரந்தன் A9 வீதிக்கு அருகாமையில் அரை ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

(CS/55630) J-1

**076 314 3387**

## SPOKEN ENGLISH & GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில் GRADE 7 to GCE - O/L, Advanced Level, பட்டதாரிகள், தொழில் புரிவோர் ஆகியவர்களுக்கு English Speaking Practice in the class itself.

(CR/42805) J-1

K.Ganesh B.A Pera **077 766 8725**

## மரக்காலைக்கு வேலையாட்கள் தேவை

தச்சு வேலையாட்கள், தச்சு வேலை பழக விருப்பமுடையவர்கள், முகாமையாளர் என்பவற்றிற்கு வேலையாட்கள் தேவை. தங்குமிட வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு :-
Brown Road, Kaladdy Jaffna.

(CS/55681) J-1

**077 367 7099**

## விசா சேவைகள்

கனடா ரூரிசம் (PVT) Ltd ஆகிய நாம் கனடா Work Permit Visit Visa, POLAND Visa, UK work permit American Visa, QUBA Visit Visa, AUSTRALIA Visa, NEWSLAND Visa ஆகியவற்றுக்கான ஆலோசனைகளும், ILTS, Degree Programme, Study Visa, FAMILY Visa, Immigaration Visa பெற்றுக்கொள்ள முடியும்.

(CS/28424) J-1

தொடர்பு:- **077 604 0373**

## கடை வாடகைக்கு

சங்கானை வீதி, அச்சுவேலியில் மேல்மாடியுடன் 1800 சதுர அடி அளவு கொண்ட திறந்த வெளி மண்டபம், நிலப்பரப்பு அளவு 09, கீழே 06 கடைக் கட்டடங்களும், வாடகைக்குண்டு. தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்

தொடர்பு: **070 532 8226**
**075 810 6917**

## வேலையாட்கள் தேவை

**Veluppillai & Sons**

**கணக்காளர் தேவை**

- தகைமை :- A/L Commerce, Computer Knowledge
- வயதெல்லை :- 25 - 40

No. 242, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(CS/903) J-1

**021 222 8464**

## பல்கலைக்கழக அனுமதிகள் பெற்றுக் கொடுக்கப்படும்

O/L, A/L எழுதியவர்களுக்கான பல்கலைக் கழக அனுமதிகள் பெற்றுக் கொடுக்கப்படும். (குறைந்த பெறுபேற்றை பெற்றவர்களுக்கும்)
Career Counselling & University Admission for local and foreign universities Phd, masters Degree & Foundation Programmes.
Contact :
Mrs P.Aksha LLB (hon) U.K, Attroney at law (R)

(CR/42812) J-1

**077 868 7169, 075 144 6083**

## தென்னிந்திய தலயாத்திரை

**12 நாட்கள் | 35 + ஆலயங்கள்**

அறுபடை வீடுகள், நவக்கிரக கோவில்கள், பஞ்சபூத ஆலயங்கள், திருப்பதி உள்ளடங்கலாக இன்னும் பல ஆலயங்கள்

ரூபா **285000.00**

**ஆடி 26 பயணம்......**

**கட்டணத்தில் உள்ளடங்குபவை**

- விசா
- இருவழி விமான பயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட (A/C) வாகனம்
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- மூன்று வேளை உணவு (சைவம்)
- நுழைவுக்கட்டணங்கள்
- தேநீர், குளிர்பானங்கள்
- மேலும் பல.....

(cs.55652) (N-1)

**076 94 64 568**

SRIBABY ENTERPRISES (PVT) LTD
1/1 - 220, Stanly Road, Jaffna

## காணி விற்பனைக்கு

இராமகிருஷ்ணா வீதி, கோண்டாவிலில் நல்ல சுற்றுப்புற சூழலில் உள்ள 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

(CS/55883) J-1

**075 159 7025**

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1987 இல் பிறந்த மிருகசீரிட நட்சத்திரம் கொழும்பில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- **077 401 5729**


## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, அறிவியல் நகர், மலையாளபுரம் (பல்கலைக் கழகத்திலிருந்து 1 1/2 Km தூரத்தில்) வீடு, சுற்றுப்புற மதிலுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

குறிப்பு :- போமிட் காணி , விலை :- 60 00 000

தொடர்பு:- **077 527 3954**

## காணி விற்பனைக்கு




கீரிமலை நகுலேஸ்வரம் வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.


தரகர்கள் தொடர்பு கொள்ளத் தேவையில்லை.
வாங்க விரும்புபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

(CS/55875) J-1

**077 348 9896**

## மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 10 . 1932



மறைவு
11 . 07 . 2024

### ராமு பத்மநாதன்

(முன்னாள் இலங்கை கூட்டுறவுச் சங்கம் மற்றும்
(C.W.E காசாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல.74, மணிக்கூட்டு வீதியை வதிவிடமாகவும் கொண்ட ராமு பத்மநாதன் கடந்த (11.07.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கண்மணி (பத்மா) அவர்களின் பாசமிகு கணவரும், பிராம்மானந்தர் (பிரான்ஸ்), கேதீஸ்வரி (பிரான்ஸ்), சர்வானந்தர் (லண்டன்), சிவானந்தர் (கனடா), விக்னேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற விஷ்மானாந்தர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரி (பிரான்ஸ்), கதிர்காமநாதன் (பிரான்ஸ்), கௌசலகுமாரி (லண்டன்), கௌசல்யா (பிரான்ஸ்), சிவராஜா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்னலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரீட்டா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், விஷ்ணுபிரியா, விஷ்ணுகா, பிரணவன், நிந்துஜன், பிருந்தன், மாதுசன், சஹானா, நிலா, கஜமுகன், சபேசன், ஷாயினி, சரண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், மாயா, அயிரா, அயன், அயிஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 74, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(021 222 9234 / 077 356 2336)

தகவல்:
குடும்பத்தினர்

(cs.55662) (N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி


Registered as a Newspaper

நெய் நெய் அரைப்போத்தில் நெய்
கட்டப்பொம்மை சொன்னதெல்லாம் பொய் பொய்
கமொராக்கதையை மூடிமறைச்சு தை தை
அரோகரா சொல்லி நாமத்தை வை வை

– சிறார் விளையாட்டுப்பாடல்

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 ஆனி 30 ஞாயிற்றுக்கிழமை (14.07.2024) சிகரம் :210

# சம்பந்தருக்குப் பிறகு ?



● நிலாந்தன்

சம்பந்தர் எதை விட்டுச் சென்றிருக்கிறாரோ அங்கிருந்துதான் அடுத்த கட்டம் தொடங்கும். சம்பந்தர் எதை விட்டுச் சென்றிருக்கிறார்?

சம்பந்தர் சிதறிப்போன தன் பலத்தைத் தானே உணராத ஒரு தமிழ்ச் சமூகத்தை விட்டுச் சென்றிருக்கிறார்.

சம்பந்தரின் வழி தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுத் தந்திருக்கிறது என்பதனை இரண்டு தளங்களில் ஆராயலாம். முதலில், அனைத்துலக அளவில். இரண்டாவதாக, உள்நாட்டுக்குள். அனைத்துலக அளவில் சம்பந்தர் தமிழ்மக்களின் மெய்யான பலம் எது என்பதைக் கண்டுபிடித்திருக்கவில்லை. தமிழ் மக்களின் துயரங்களுக்கெல்லாம் எது காரணமோ அதுதான் தமிழ் மக்களின் மெய்யான பலமும். அதுதான் தமிழ் மக்களின் புவிசார் அமைவிடம். அந்த அமைவிடம் காரணமாகத்தான் இனப்பிரச்சினை பிராந்தியமயப்பட்டது. பின்னர் பூகோளமயப்பட்டது. அந்த அமைவிடம் காரணமாகத்தான் திம்புவிலிருந்து ஒஸ்லோ வரையிலும் பேச்சுவார்த்தைகள் நடந்தன. அந்த அமைவிடம் காரணமாகத்தான் ஈழத்தமிழர்கள் பேரரசுகளின் இழுவிசைகளுக்குள் சிக்கிக் கிழிபடும் மக்களாக மாறியிருக்கிறார்கள். எனவே எது ஈழத்தமிழர்களின் துயரங்களுக்கெல்லாம் ஊற்றுமூலமாக இருக்கின்றதோ அதையே வெற்றிக்குரிய அடிப்படையாக மாற்றுவதில் சம்பந்தர் வெற்றிபெறவில்லை. அவர் ஈழத்தமிழ் அரசியலை பெருமளவுக்கு சர்வதேச மயநீக்கம் செய்வதிலும் பிராந்திய மயநீக்கம் செய்வதிலும் ஆர்வமாகக் காணப்பட்டார்.

இந்தியாவிடம் போனால் சிங்களமக்கள் கோபிப்பார்கள் என்று கருதி இந்தியாவின் அழைப்பை நிராகரித்தார். அதுபோலவே ஐ.நா.வில் பரிகார நீதியை கேட்க அவர் விரும்பவில்லை. அதாவது இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை அவர் கேட்கவில்லை. மாறாக நிலைமாறுகால நீதியைத்தான் சம்பந்தர் ஆதரித்தார். அதற்குரிய ஐ.நா.வின் தீர்மானத்தில் அவர் பங்காளியாகவும் இருந்தார். ஆனால் " 6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையைச் செய்தோம் அதில் தோல்வி அடைந்து விட்டோம்" என்று சுமந்திரன் 2021ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கூறினார். எனவே பரிகாரநீதியும் இல்லை; நிலைமாறுகால நீதியும் இல்லை. இப்பொழுது ஐ.நா.வில் பலவீனமான சான்றுகளைச் சேகரிக்கும் ஒரு அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதுதவிர புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களால் இயன்றதைச் செய்து இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள். குறிப்பாக கனடாவில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவற்றை எல்லாம் அடுத்தடுத்த கட்டத்துக்கு வளர்த்துச்செல்லத் தேவையான ஓர் அரசியல் தலைமைத்துவத்தை தாயகத்தில் இருந்து சம்பந்தர் வழங்கத் தவறினார். அதனால் அவர் இனப்பிரச்சினையை உள்நாட்டுக்குள் சுருக்க விரும்பிய சிங்கள-பௌத்த அரசுக் கட்டமைப்புக்குத் துணைபோனார் என்பதுதான் சரி. அதாவது சர்வதேச அளவில் சம்பந்தர் தமிழ் மக்களின் அரசியலை குறிப்பிடத்தக்க அளவுக்கு தோற்கடித்து விட்டார். இனப்பிரச்சினை எனப்படுவது சாராம்சத்தில் ஓர் அனைத்துலகப் பிரச்சினைதான். அதற்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. உள்நாட்டுத் தீர்வு கிடையாது. எனவே இனப்பிரச்சினையை அதன் சர்வதேச, பிராந்தியப் பரிமாணங்களில் இருந்து வெட்டி எடுப்பது என்பது தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்குச் சமம். சம்பந்தர் அதைத்தான் செய்தார்.

**சம்பந்தர் தமிழ் மக்களைச் சிதறடித்து விட்டார். தமிழ் மக்களின் அடிப்படைப் பலங்களைப் பொருத்தமான விதங்களில் கையாளத் தவறி, தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தியிருக்கிறார். முடிவில் தானும் தனிமைப்பட்டுப் போனார்.**

உள்நாட்டில் அவர் என்ன செய்தார்? யாழ்ப்பாணத்தில் அவருடைய இறுதி நிகழ்வு அதற்குச் சான்று. நூற்றுக்கணக்கானவர்கள்தான் அதில் பங்குபற்றினார்கள். அவருடைய கட்சி அவரை ஒரு முதுபெரும் தலைவர் என்று அழைக்கின்றது. ஆனால் ஒரு முதுபெரும் தலைவரின் பூதவுடல் எடுத்துவரப்பட்ட வழிநெடுக மக்கள் காத்திருந்து மலர் தூவவில்லை. அதுமட்டுமில்லை, அவருடைய கட்சித் தொண்டர்கள்கூட ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தவில்லை. அதைவிட முக்கியமாக, சம்பந்தரின் பூத உடல் அடுத்த நாள் விமானத்தில் எடுத்துச் செல்லப்படுவதற்கு இடைப்பட்ட இரவில் தந்தை செல்வா கலையரங்கில் ஓர் அறையில் விடாது சுற்றும் விசிறிகளின் கீழே அனாதையாக வைக்கப்பட்டிருந்தது என்ற செய்தி. அது மிகத் தோல்விகரமானது. சில கட்சி உறுப்பினர்கள் அந்த அறைக்கு வெளியே நின்று இருக்கலாம். ஆனால் ஒரு முதுபெரும் தலைவரின் உடல் ஓர் இரவு முழுவதும் அனாதையாக விடப்பட்டிருந்தமை என்பது சம்பந்தரின் அரசியல் தோல்வியைக் காட்டுகின்றது.

பொதுவாக ஊரில் ஒரு கிராமவாசி இறந்தால், இரவில் அந்த உடலைத் தனியே விடமாட்டார்கள். அந்த உடலுக்கு அருகே யாராவது உறங்குவார்கள். ஒரு குத்துவிளக்கு அல்லது மெழுகுதிரி கால்மாட்டில் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும். யாராவது தேவாரம் பாடுவார்கள் அல்லது ஜெபம் பண்ணுவார்கள். இடைக்கிடை பெண்கள் ஒப்பாரி வைப்பார்கள். ஆனால் சம்பந்தருக்கு தந்தை செல்வா கலையரங்கில் இவை எவையும் இருக்கவில்லை. சம்பந்தரின் தோல்வியை மதிப்பிட அது ஒன்றே போதும்.

நவீன தமிழ் அரசியலில் ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்ற ஒரு கூட்டணி அவருடைய கையில் கொடுக்கப்பட்டிருந்தது. 22 ஆசனங்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் அந்த ஆசனங்களின் தொகை குறைந்து இப்பொழுது மொத்தம் 13 ஆசனங்கள். அவைகூட சம்பந்தரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவில்லை. முதலில் ஆயுத மோதல்கள் முடிந்த கையோடு சம்பந்தர் கூட்டமைப்பைப் புலி நீக்கம் செய்தார். அதன்பின் படிப்படியாக சர்வதேச நீக்கம், பிராந்திய நீக்கம் செய்தார்.


07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.வி.தவராசா

(சென்றவாரத் தொடர்ச்சி)




# கோத்தாபய மீது கொலைமுயற்சி; வித்தியாசமான விசாரணைகள்

## சட்டரீதியான நாணயமாற்று நிறுவனம்

முதலாவது சந்தேகநபரான ரவிக்குமார் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரியின் அனுசரணையில் நான் ஆஜராகி இருந்தேன். எனது வாதத்தில், 'ரவிக்குமார் சட்டரீதியாக அரசிடமிருந்து அனுமதி பெற்றே வெள்ளவத்தையில் வெளிநாட்டு நாணய மாற்று நிறுவனத்தை நடத்தி வந்துள்ளார். பணத்தைப் பெறவந்தவரின் அடையாளத்தை, அடையாள அட்டையின் மூலம் உறுதிசெய்யப்பட்ட பின்னரே பணம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைதான் சகல நாணய மாற்று நிறுவனங்கள், அரச வங்கிகள், தனியார் வங்கிகள், வெஸ்ரேன்யூனியன் என்பவற்றினால் பின்பற்றப்படுகின்றது. பணத்தைப்பெற வந்தவர்களின் அடையாளம் உறுதிப்படுத்தப்படுமேதவிர எதற்காக இந்தப் பணம் வந்துள்ளது என்ற கேள்வி கேட்கப்படுவதில்லை. அரசவங்கியின் மூலம் இந்தப் பணம் மீளப்பெறப்பட்டிருந்தால் பணத்தை வழங்கியவங்கி அதிகாரியை கைது செய்யமுடியுமா?

ரவிக்குமார் பொலிஸாருக்கு வழங்கிய தனது வாக்குமூலத்தில் நடந்தவற்றினை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சந்தேநபரான ரவிக்குமாருக்கு எதிராக எந்தவிதமான சான்றும் பொலிஸாரினால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் அறிக்கையிலோ அல்லது மேலதிக விசாரணை அறிக்கைகளிலோ குறிப்பிடப்படவில்லை. பொலிஸ்மாஅதிபரின் உத்தரவுக்கமைய மீண்டும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் விசாரணையைப் பாரம் கொடுத்து விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவிடும்படி நீதிமன்றத்தை வேண்டிக்கொள்கிறேன்' என்று தெரிவித்தேன்.

எனது வாதத்தை அடுத்து பிரதான நீதிவான் நிசந்த அப்புஆராச்சி சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறும்படி பொலிஸாருக்கு கட்டளையிட்டார்.

பொலிஸார் தரப்பில் நீதிமன்றில் ஆஜராகிய அரச சட்டத்தரணி எனது வேண்டுகோளுக்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், இந்த வழக்கின் குற்றச்சாட்டுகள் மிகவும் பாரதூரமானவை எனவும் பாதுகாப்புச் செயலாளரைக் கொலை செய்ய எத்தனித்துள்ளதோடு இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளதாகவும் ஏழு பாதுகாப்புப் படையினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் மேலும் அரச பொதுச் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளதால் விசாரணைகளை பொலிஸார் பலமுனைகளில் நடத்துவதாகவும், அதனாலேயே இத்தகைய நடைமுறை பின்பற்றப்படுவதாகவும் தெரிவித்தார். அன்றையதினம் விசாரணைகளை நடத்தும் ஆறு பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் பலர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.



## அடிப்படை உரிமை மீறல் மனு

கைதுசெய்யப்பட்ட பின்னர் ரவிக்குமார் தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸாரின் விசார்ணைக்குட்படுத்தப்பட்டிருந்த நிலையில் ரவிக்குமாரின் கைதும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் சட்டத்துக்கு முரணானது என உயர் நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் ,

'மனுதாரரான ரவிக்குமார் இலங்கையில் பிறந்திருந்தாலும் பிரித்தானியப் பிரஜையாவார். பிரித்தானியாவில் (Nayaik Estates) என்ற பெயரில் ஒரு வர்த்தக ஸ்தாபனத்தையும், வெளிநாட்டு நாணய மாற்று வர்த்தகத்தையும் நடத்திவந்துள்ளார். அவரது மூன்று பிள்ளைகளும், மனைவியும் பிரித்தானியாவிலே வசிக்கின்றனர். 2005ஆம் ஆண்டு கடும் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த தனது தாயாரை பார்ப்பதற்காக இலங்கை வந்தவரே ரவிக்குமார். தாயாரை நோய்நிலையில் தனிமையில் விட்டுவிட்டு பிரித்தானியாவுக்குத்திரும்பிச்செல்லக்கூடிய சூழ்நிலைகள் காணப்படாமையால் பிரித்தானியாவில் தான் நடத்திவந்த வர்த்தகத்தின் கிளையொன்றை வெள்ளவத்தையில் திறந்து வெளிநாட்டு நாணய மாற்று நிறுவனத்தை ரவிக்குமார் நடத்தி வந்தார்.

வழமையாக பல வாடிக்கையாளர்கள் நாணயமாற்றுதலுக்காக மனுதாரரின் தொழில் நிறுவனத்துக்கு வந்து செல்வார்கள். அவர்களின் அடையாளத்தை அடையாள அட்டை மற்றைய ஆவணங்கள் மூலமும் உறுதிப்படுத்திய பின்னர் வாடிக்கையாளர்களுக்கு நிறுவனத்தின் முகாமையாளர் பணத்தை வழங்குவார். இந்த வழக்கு விசாரணையில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்களுக்கும் மனுதாரருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மனுதாரர் கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் ஒருநாளும் சந்தேகநபர்களை கண்டதில்லை. இந்தக் கொலை முயற்சிக்கும் மனுதாரருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனுதாரரான ரவிக்குமார் தொடர்ந்தும் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படைமனித உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டு விளக்கத்துக்கான திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு பொலிஸாரினால் தாக்கல்செய்யப்பட்ட மேலதிக அறிக்கைகளில் கொலை முயற்சிக்கு உடந்தையாக ரவிக்குமார் செயற்பட்டிருக்கலாம் என சந்தேகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. எனினும் பொலிஸாரின் விசாரணைகளில் எந்தச் சான்றுகளும் ரவிக்குமாருக்கு எதிராக பொலிஸார் முன்வைக்கவில்லை. பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸாருக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க மறுப்புத் தெரிவித்திருந்த ரவிக்குமார், பிரதான நீதிவானுக்கு குற்றவியல் சட்டக் கோவை பிரிவு 127(1)ஆம் பிரிவின்கீழ் தனக்கும் பாதுகாப்புச் செயலாளரின் கொலை முயற்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமோ, தொடர்போ இல்லையெனவும், சந்தேகத்தின் அடிப்படையிலேயே தான் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் வாக்குமூலம் அளித்திருந்தார்.



## ரவிக்குமாருக்கு பிணை

இந்த நிகழ்வுகளின் அடிப்படையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ரவிக்குமார் சார்பாக பிணைமனுவொன்று தாக்கல் செய்யப்பட்டு வாதாடப்பட்டது. அந்த மனுவின் விசாரணை யின் பின்னர் ரவிக்குமாரை நிபந்தனையில் பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார். ஆனால் அதன் பின்னர்தான் எவருமே எதிர்பாராத சில நிகழ்வுகள் மளமளவென நடந்தேறின.

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த ரவிக்குமாரை கைதுசெய்வதற்காக பொலி ஸார் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து (ஜனாதிபதி) தடுப்புக்காவல் உத்தரவு ஒன்றைப் பெற்று அவரை மீண்டும் கைதுசெய்யத் தயாராக இருந்தனர். இந்த விடயம் எங்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டமையால் உடனடியாக இரண்டாவது முறையாக ஒரேநாளில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் போது உயர்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் ரவிக்குமாரை மீண்டும் கைது செய்வதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன.


'புதிய தடுப்புக் காவல் உத்தரவில் மனுதாரர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டபொழுது உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கு கூறப்பட்ட அதே காரணங்களும் அதையொத்த காரணங்களும் காணப்படுகின்றனவே தவிர வேறு எந்த புதிய சான்றுகளோ அல்லது தடையுத்தரவை நியாயப்படுத்தும் காரணங்களோ காணப்படவில்லை . அத்துடன் ஏற்கனவே மேல்நீதிமன்றத்தினால் பிணையில் விடப்படும்பொழுது மேல் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மனுதாரரான ரவிக்குமார் மீறவில்லை 'எனவும் மனுதாரரின் சார்பில் உயர்நீதிமன்றின் நீதியரசர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

(மிகுதி அடுத்த வாரம்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கள்ளுத்திருத்தலும் உள்ளூர் மதுபானங்களும்



அ.முத்துக்கிருஷ்ணன்

தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சிப் பகுதியை சேர்ந்த கருணாபுரத்தில் சாராயம் அருந்தியவர்களில் 61 பேர் மரணமடைந்ததோடு,150க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த நிலையில் தமிழ்நாடும் சாராயமும் என்கிற தளத்தில் மீண்டும் ஒரு பெரும் விவாதம் எழுந்துள்ளது. ஒவ்வொரு முறையும் இவ்வாறான சாராய மரணங்களின் போது சமூகத்தில் பெரும் கொந்தளிப்பான மனநிலை ஏற்படும், உடனடியாக பூரண மதுவிலக்கு என்கிற எல்லை வரை விவாதங்கள் செல்லும்.

இந்த மரணங்களின் காரணங்களை அறிந்து கொள்ள நாம் உண்மையாகவே விரும்பினால் முதலில் இந்திய நிலத்தில் போதை வஸ்துகளின் வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டும். உலகம் முழுவதுமே ஒவ்வொரு நிலத்திலும் விளையும் பொருள்களின் உபரியை கொண்டு விதவிதமாக மது வகைகளை மக்கள் காலம் காலமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். இந்தியாவிலும் நீங்கள் ஒரு சுற்று வந்தீர்கள் என்றால் ஏராளமான புதிய புதிய மது வகைகளை பார்க்கலாம், இவை எல்லாம் அந்தந்த நிலத்தின் மக்களின் வாழ்வுடன் ஐக்கியமானவை.

அரிசி மிகுதியாக விளைகிற வங்கத்தில் பாங்களா என்கிற பாணம் மிகவும் பிரபலம், கோவாவிற்கு நீங்கள் ஒரு பயணம் செய்தால் அங்கே முந்திரி பழத்தில் இருந்து வடிக்கப்படுகிற பெனியும் தென்னங்கள்ளும் மக்கள் அன்றாடம் பருகும் பானங்களாக உள்ளன. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களுக்கு சென்றால் அங்கே ஒவ்வொரு பகுதியிலும் விதவிதமாக உள்ளூர் பானங்கள் கிடைக்கின்றன. அரிசியில் இருந்து தயாரிக்கப்படும் போரோ அபோங் வடகிழக்கில் மட்டுமே கிடைக்கும். திரிபுராவில் பலாப்பழத்தில் இருந்து வடிக்கப்படுகிற சாவுராக் அவர்களின் பிரிய பானம், மேகாலயாவில் கியாத் என்கிற அவர்களின் உள்ளூர் பியர் போன்ற ஒரு புளித்த பானம். திபெத், நேபாளத்தில் உருவாகி ஓர் அற்புதமான மதுவகையாக சாங்க் இந்தியாவின் வடகிழக்கு மாகாணங்களில் கிடைக்கிறது, மகாராஷ்திரத்தில் இலுப்பை பூ, முந்திரி, ஆரஞ்சுப்பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் விதவிதமான பானங்கள் கிடைக்கும். தெலுங்கானாவில் மாம்பழம், வெல்லம் போட்டு தயாரிக்கப்படும் குடம்பாவை நீங்கள் ருசிக்கலாம். பிகார், ஒடிசா, மத்திய பிரதேசம், ஜார்கண்டு, சத்தீஸ்கர் என எங்கு சென்றாலும் ஹண்டியா கிடைக்கும். ஹிமாச்சலத்தில் லுக்டி, லடாக் பகுதியில் மட்டுமே கிடைக்கும் அரக், சிறுதானியங்களில் இருந்து செய்யப்படும் தோங்கா டார்ஜீலிங், சிக்கிம் பகுதிகளில் கிடைக்கும், குஜராத், ராஜஸ்தான் பகுதிகளில் கிடைக்கும் சோய்சோ, இப்படி இந்தியா முழுவதும் அந்தந்த நிலத்தில் விளையும் பானங்கள் கிடைக்கும் . அவற்றைக் குறித்து தனியே ஒரு புத்தகமே எழுதலாம்.

இந்தியாவில் மட்டும் அல்ல உலகம் முழுவதுமே இது தான் வாடிக்கை. ரஷ்யாவில் உருளைக்கிழங்கில் இருந்த வோட்கா, கொரியாவில் சோஜு, ப்ராசில் நாட்டில் சாச்சா, அமெரிக்காவின் பார்பன், பெரு நாட்டின் பிஸ்கோ, சீனாவின் மவோதாய், மெக்சிக்கோவின் டெக்கிலா, துருக்கியில் ராக்கி, ஸ்பெயின் நாட்டின் சாங்கிரியா, ஜோர்தன் நாட்டின் அரக், இங்கிலாந்தின் ஜின், ஸ்காட்லாண்டின் விஸ்கி, நேபாளத்தின் ராக்ஷீ, ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனிய அத்திப்பழ ஜின் வகைகள், விக்டோரியா பிட்டர், பேல் ஏல், சுல்லிவன் விஸ்கி, ஹார்டீஸ் வைன், கும்முலஸ் வைன் என இந்தப் பட்டியலை விரிவுபடுத்தினால் இரண்டாயிரம் பானங்களின் பெயர்களின் தொகுப்பாக அது மாறும்.

இந்தியாவின் ஒவ்வொரு திருவிழாவிலும் பிரத்யேக மது பானங்கள் தயாரிக்கும் வழக்கம் பன்நெடுங்காலமாக நடைமுறையில் உள்ளது. கஞ்சாச் செடியில் இருந்து தயாரிக்கப்படுகிற 'பாங்' என்கிற பானம் இல்லாமல் ஒரு திருவிழாவும் ஒரு விசேஷமும் நடைபெறாது. இந்து மதத்தின் முக்கியமான கடவுளாக விளங்கும் சிவனின் விருப்பமான செடியாக கஞ்சாச் செடி கருதப்படுகிறது. இந்துமதத்தின் நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வண வேதத்தில், உலகின் மிகவும் புனிதமான ஐந்து தாவரங்களில் ஒன்றாக கஞ்சாச் செடியும் பார்க்கப்படுகிறது. இந்தத் தாவரம் மகிழ்ச்சியின் ஆதாரமாக, விடுதலையின் கருவியாக விவரிக்கப்படுகிறது.

வாராணாசியில் சாமியார்கள் பாங்கு குடிக்கும் அல்லது சிலும்பியில் வைத்து கஞ்சா குடிக்கும் காட்சிகளை நீங்கள் சர்வசாதாரணமாகப் பார்க்கலாம். இப்படி உலகம் முழுவதிலுமே அந்தந்த மக்களின் கலாசாரத்தின் ஒரு பகுதியாகவே மது வகைகள் இருந்து வருகின்றன என்கிற அடிப்படைப் புரிதல் அவசியமானது. இந்தியா முழுவதுமே கடவுளுக்கு படைக்கப்படும் படையலில் சுருட்டும், சாராயமும், கஞ்சாவும் வைப்பது வழிபாட்டின் ஒரு பகுதியாகவே இருந்து வருகிறது.

இந்தச் சூழலில் தான் நம்முடைய நிலத்தின் பானங்கள் எல்லாம் தடை செய்யப்பட்டு, இங்கே வெளிநாட்டு வகை சாராய வகைகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட மது வகைகளாக விற்கப்பட்டு வரும அவலநிலை நிலவி வருகிறது. இந்த மது வகைகளை தயாரிக்கிற Indianmade foreign liquor (IMFL) என்கிற பெரும் தொழில் கூட்டு தான் தமிழகத்தின் பெரும் சாபக்கேடுகளின் தொடக்கப் புள்ளியாக உள்ளது. இந்த வெளிநாட்டு வகை சாராய வகைகள் தான் தமிழகத்தின் டாஸ்மாக் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இவைகள் அனைத்துமே விலை அதிகமானவை, தினசரி கடுமையான உடல் உழைப்பை செலுத்தி வேலை செய்யும் எளிய தொழிலாளர்கள் வாங்கக்கூடிய அளவில் இதன் விலைகள் ஒருபோதும் இருந்ததில்லை. ஒரு தொழிலாளி ஒரு நாளில் 600 முதல் 1000 ரூபா வரை வருமானமாக ஈட்டுகிறார் என்றால், அவர் இந்த டாஸ்மாக் கடைக்கு சென்றால் அளவாக குடிப்பவராக இருந்தாலும் கூட குறைந்தது 300 500 வரை செலவாகும், அவர் நன்றாகக் குடிப்பவர் என்றால் இந்த 1000 ரூபாவும் காணாமல் போகும். தமிழ்நாட்டின் மிக அருகில் இருக்கும் கேரளா மாநிலம் முழுவதுமே கள்ளுக்கடைகள் உள்ளன, அங்கே இன்றைக்கும் 750 மி.லீ கள்ளு ரூ 70 க்கு விற்பனை செய்யப்படுகிறது, இந்தக் கள் கேரளாவில் ஏழைகளின் 'ஸ்காட்சாக' அழைக்கப்படுகிறது. தமிழகத்தில் தென்னை, பனை ஆகிய இரண்டு விதமான கள் இறக்கி அருந்துவதற்கான வாய்ப்புள்ளது ஆனால் இவை தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளன, அதேபோல் இங்கே காய்ச்சப்படும் சாராய வகைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. எளிய உழைக்கும் மக்களால் வெளிநாட்டு வகை டாஸ்மாக் சரக்குகளை வாங்க முடியாதபோது தான் அவர்கள் இப்படி இங்கே காய்ச்சி விற்பனை செய்யப்படும் உள்ளூர் சாராயங்கள் நோக்கி வலுக்கட்டாயமாக தள்ளப்படுகிறார்கள். வெளிநாட்டு வகை சாராயங்கள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டவையாகவும், உள்ளூர் பானங்கள் சட்டவிரோதமானவையாக, கள்ளச்சாராயமாகவும் பார்க்கப்படும் அவல நிலை உலகில் வேறு எங்கும் இல்லை.

இந்தச் சூழலில் தான் உள்ளூர்ச் சாராயம் காய்ச்சுபவர்கள் மத்தியில் யார் காய்ச்சும் சாராயத்தில் போதை அதிகம், யார் இந்தச் சந்தையைக் கைப்பற்றுவது என்கிற தொழில் போட்டியில் சாராயத்தில் பல வகை வேதிப்பொருள்களைக் கலக்கிறார்கள், கள்ளக்குறிச்சியில் மெத்தனால் கலந்ததால் தான் இன்றைக்கு இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது.

கள்ளச்சாராயத்தை தடுத்து நிறுத்தும் பொறுப்பு தமிழ்நாடு மதுவிலக்கு 'கலால்' பிரிவு என்கிற தமிழ்நாடு காவல்துறையின் முக்கியமான துறையின்கீழ் வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் கள்ளச்சாராயத்துக்கு எதிரான நடவடிக்கையில் 4 இலட்சத்து 60 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. கைது செய்யப்பட்டவர்களில் 565 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் ஓர் அறிக்கை தெரிவிக்கிறது. உலகம் முழுவதும் உள்ள 192 நாடுகளில் 10 நாடுகளில் மட்டுமே அமுலில் உள்ளது, இந்தியாவில் 5 மாநிலங்களில் மதுவிலக்கு சட்டம் பெயரளவில் உள்ளது ஆனால் அங்கே மூலை முடுக்கெல்லாம் மது கிடைக்கவே செய்கிறது என்கிற உண்மையை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

எளிய மக்கள் குடிக்கும் வகையில் உள்ளூர் பானங்களை Indianmade foreign liquor (IMFL) போலவே Country Made Local Liquor என்கிற தனித்த அமைப்புகளை உருவாக்கி உற்பத்தி செய்யும் உரிமங்களை அரசு வழங்கினால் தான் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும்.

ஆஸ்திரேலியாவில் மது விலக்கு என்கிற ஒன்றைப் பேசினால் மக்கள் சிரிப்பார்களோ அப்படியே உலகம் முழுவதும் மது விலக்கு என்பதை நகைப்புடன் தான் பார்ப்பார்கள். தமிழகத்தில் மட்டும் இப்படியான முட்டாள்தனமான வாதங்களை ஊடக வெளிச்சத்தில் பலர் முன்வைக்கிறார்கள். கள்ளக்குறிச்சியை தொடர்ந்து கள்ளச்சாராயம் தொடர்பான சட்டங்கள் இன்னும் கடுமையாக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. காய்ச்சுபவர்கள் மீது மட்டும் அல்ல கச்சிதமாக இந்த லாபத்தில் பெரும் பகுதியை வாங்கும் காவல்துறையினர் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.


கள்ளச்சாராயத்தை நல்ல சாராயமாக உரிமங்கள் கொடுத்து காய்ச்சி, தென்னங்கள்ளை, பனங்கள்ளை அங்கீகரிக்கப்பட்ட இந்த நிலத்தின் பானங்களாக முறைப்படுத்தினாலே ஒழிய இந்தச் சாராயச் சாவுகளை தடுக்க இயலாது. இலங்கையில் கொழும்பு விமானநிலையம் தொடங்கி யாழ்ப்பாணம் வரை எங்கும் நீங்கள் தென்னஞ் சாராயம் வாங்கலாம், அதிவிசேசம் வாங்கலாம். இதுவே ஆரோக்கியமான முறை. இலங்கை மற்றும் கேரளாவில் இருந்து தமிழ்நாடு பாடம் கற்க வேண்டும், உள்ளூர் மக்களுக்கு மட்டும் அல்ல நம் நிலத்தின் மது வகைகள் வெளிநாடுகள் வரை செல்ல வகை செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேச அடையாளத்தை உரத்துச்சொல்லும்

# தமிழீழ மகளிர் காற்பந்தாட்ட அணி

சர்வதேச காற்பந்தாட்ட அரங்கில் பெரும் அதிர்வை உண்டாக்கியிருக்கிறது தமிழீழ மகளிர் காற்பந்தாட்ட அணி. சர்வதேசப் போட்டியொன்றின் இறுதியாட்டத்துக்கு முன்னேறிய, நாடற்ற மகளிரின் அணி, தமிழீழம் என்ற தேசத்தின் பெயரை எல்லோரையும் உச்சரிக்க வைத்திருக்கிறது. நாடற்றவர்களின் அணியாகக் களமிறங்கி, சாதித்துக் காட்டிய தமிழீழ மகளிர் காற்பந்தாட்ட அணியின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படுபவர் புலம்பெயர்ந்து தற்போது கனடாவில் வாழ்பவரான சங்கரி சிறீ. தமிழீழக் காற்பந்தாட்ட அணியின் உருவாக்கம், ஒன்றிணைவு, பயிற்சிகள், வியூகங்கள், எதிர்கால இலக்குகள் தொடர்பில் அந்த அணியின் புலம்பெயர் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் இங்கு பொருத்தம் கருதி, மீள் பிரசுரமாகின்றது.



**கேள்வி: தமிழீழ மகளிர் காற்பந்தாட்ட அணியை உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் (Idea) உங்களுக்கு எப்படி வந்தது?**

**பதில்:** ஆண்களுக்கான காற்பந்தாட்ட அணி இருப்பதுபோல மகளிருக்கான காற்பந்தாட்ட அணியொன்றை இறக்கவேண்டும் என்பது எங்களின் நீண்டநாள் ஆசை. கடந்த சிலவருடங்களாக, தமிழ் மகளிர் இளையோர் அவர்தம் நாடுகளில் உள்ள காற்பந்தாட்டக் கழகங்களில் சிறப்பாக விளையாடுகின்றனர் என்கிற தகவலை அறிந்தவுடன், நாம் 2022 ஆம் ஆண்டு முதலாவது காற்பந்தாட்டத் தெரிவை நடத்தியிருந்தோம். ஆண்களும் பெண்களும் சமம் என்பது எமது விடுதலைப் போராட்டத்தில் நடைமுறையிலிருந்த விடயம்தான். அதனையே நாங்களும் எமது பிள்ளைகள் மத்தியில் கொண்டு செல்லத்தான் மகளிர் அணியை உருவாக்கினோம்.

**கேள்வி: நாடற்ற தேசிய இனங்களுக்கான விளையாட்டுகள் மூலம் (காற்பந்தாட்டம் போன்றவை) உலகிற்கு சொல்ல வருவதென்ன?**

**பதில்:** அங்கீகரிக்கப்படாத தேசங்களினது நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டுகளின் ஊடாக நாம் உலகத்திற்கு சொல்லும் செய்தி என்னவென்றால், நாமும் ஓர் இனம்தான். தமிழீழம் எங்களின் அடையாளம். எங்களிடம் அந்த அடையாளம் உண்டென உலகிற்கு காட்டுவதற்கான ஒரு வழியாக இந்தக் காற்பந்தாட்டப் போட்டியை வடிவமைத்திருக்கின்றோம். வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் எமது இனத்தையும் இனத்தின் அடையாளத்தையும் உலகிற்கு காட்டவே இந்தப் போட்டியில் கலந்துகொள்கின்றோம். எனவே ஈழத்தமிழர்களுக்கான தேச அங்கீகாரத்திற்காகவே நாம் தமிழீழத்தை பிரகடனப்படுத்தி விளையாடுகின்றோம்.

**கேள்வி: ஈழத்தமிழர்கள் உலகம் முழுவதும் பரவி வாழ்கின்ற போதிலும் தங்களுக்கிடையில் ஓர் இணைப்பில் இல்லாதவர்களாக இருக்கின்றனர். இது போன்ற விளையாட்டுகள் ஈழத்தமிழ் மக்களை எவ்வகையில் இணைக்க உதவும்?**

**பதில்:** தமிழர்கள் உலகம் முழுவதும் வாழுகின்றபோதிலும், தமிழ்மொழியால் தான் நாம் இணைகின்றோம். அத்தோடு ஈழத்தமிழர்கள் எனச் சொல்லும்போதே நாம் இனமாக இணைகின்றோம். உதாரணமாக எமது அணியை எடுத்துக்கொண்டால், அதில் இடம்பெறுகின்ற அனைவருமே வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்து இணைந்துகொண்டவர்கள்தான். எங்கள் அணியின் சுவாரஸ்யமே அதுதான். நாம் ஒரு பருவகால விளையாட்டணி கிடையாது. முதன்முதலாக ஒரு வாரப் பயிற்சியுடன், முன்பின் சந்தித்திராத 22 விளையாட்டு வீராங்கனைகளும், 9 பணியாளர்களும் ஒரே இடத்தில் கூட்டாக விளையாடியமையும், அது எங்களின் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றமையும் போதும் எங்களின் இனத்தை ஒன்றிணைப்பதற்கு. அந்த அடையாளத்திற்கு உதாரணம் தான் இந்த அணி. ஏழு நாடுகளிலிருந்து வந்த வீராங்கனைகளும், அவரவர் நாடுகளில் பேசுகின்ற மொழி வித்தியாசமானது. வயது வித்தியாசமானது. அவர்களுக்கிடையில் அதிக வேற்றுமைகள் இருந்தன. ஆனால் நாம் தமிழர்கள், நாம் ஈழத்தமிழர்களுக்காக விளையாடுகின்றோம் போன்ற விடயங்கள்தான் எங்களைப் பெரியளவில் இணைத்தன.

**கேள்வி: இப்படியொரு சர்வதேசப்போட்டியினை நடத்துவதில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் எவை?**

**பதில்:** அதிக சவால்கள் இருந்தன. முக்கியமாக நிதிசார் பிரச்சினைகள் இருந்தன. ஒரு வாரப் போட்டிக்கு, மகளிர் அணிக்கு மாத்திரமே நாற்பதாயிரம் யூரோக்கள் தேவைப்பட்டன. ஏனென்றால், இந்தப் பிள்ளைகளின் செலவு முழுவதையுமே எங்களின் அமைப்பே பொறுப்பேற்கும். எனவே நிதிப் பக்கத்தினால் பெரிய தொகை. அதனை சேகரித்துக்கொடுப்பது பெரியசவால்.

இன்னொரு சவால் என நான் குறிப்பிடுவது, ஏழு வெவ்வேறு நாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட விளையாட்டு வீராங்கனைகளை ஓரிடத்தில் ஒருங்கிணைத்து ஒரு வாரப் பயிற்சி வழங்கவேண்டும். இவர்களுக்குப் பயிற்சி வழங்குவது என்பதை விட, ஒரு வழித்தடத்தின் கீழ் கொண்டுவருவதைத்தான் ஒரு வாரத்திற்குள் நாம் முக்கியத்துவப்படுத்தினோம். அதுவேதான் பெரிய சவாலாகவும் இருந்தது. ஏனென்றால் இந்தப் பிள்ளைகள் அனைவரும் தத்தம் நாடுகளில் உள்ள நல்ல கழகங்களில் உயர்தரமான பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே சவால் என்பது இவையிரண்டும்தான். இந்த இரண்டு பிரதான சவால்களையும் தாண்டி நாம் நிச்சயமாக சாதிப்போம் என்ற நோக்கத்தில் நாம் இயங்கினோம்.

**கேள்வி: உலகம் முழுவதும் கிரிக்கெட் கவர்ச்சிகரமானதும், அதிக மக்களின் கவனத்தை ஈர்க்கும் ஒரு விளையாட்டாக இருந்து வருகின்றது. இந்நிலையில் நீங்கள் காற்பந்தாட்டத்தை முதலில் தெரிவுசெய்தமைக்கான காரணம் என்ன?**

**பதில்:** கிரிக்கெட் மட்டுமல்ல, அதிக விளையாட்டுகள் உலகளவில் பிரபலமானவையாக இருக்கின்றன. ஆனால் நாங்கள் ஏன் காற்பந்தாட்டத்தினைத் தெரிவுசெய்தோம் என்றால், கடைசி பத்தாண்டுகளாக, நாம் வாழுகின்ற நாடுகளில் இங்குள்ள அணிகளோடு இணைந்து விளையாடுவது இலகுவானது. இன்னொரு விடயம், காற்பந்தாட்ட அணி, 2003 ஆம் ஆண்டு ஈழத்தில் இருந்தது. அது ஆண்களுக்கான அணி. அந்த அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அதனை வெளியில்கொண்டுவந்து, வெளிநாடுகளில் விளையாடுவதற்கு நாம் உருவாக்கியதுதான் Tamileelam Football Association. காற்பந்தாட்டமானது தாயகத்திலிருந்தமையால்தான் அந்த அணியைத் திரும்பவும் கொண்டுவந்தோம். பெண்கள் மாத்திரமல்ல, ஆண்கள்கூட தத்தம் நாடுகளில் விளையாடிவருகின்றனர். அந்தந்த நாடுகளில் உள்ள பெரிய கழகங்களில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். அந்தந்த நாடுகளில் தமிழ் கழகங்களுக்கிடையிலான போட்டிகள்கூட இடம்பெறுகின்றன. நகர கழகங்களுக்கிடையிலான போட்டிகள்கூட உண்டு. எனவே 11 பேர் கொண்ட அணியை உருவாக்கவும், எங்களின் இன அடையாளத்தை வெளிப்படுத்தவும், அதனை உலகெங்கும் எடுத்துச்செல்லவும் காற்பந்தாட்டத்தை தெரிவுசெய்தோம்.

**கேள்வி: இந்தப் போட்டித்தொடரின் அடுத்தடுத்த கட்டங்கள் எவ்வாறாகத் திட்டமிடுகிறீர்கள்?**

**பதில்:** இதுவேதான் எங்களின் மகளிர் அணி கலந்துகொண்ட முதலாவது சர்வதேசப் போட்டி. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு போட்டியை நாம் ஏற்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். அது அணிக்கும், விளையாட்டுக்கும் அவசியப்படுகின்றது. இனிவரும் மாதங்களில் அதிக சர்வதேச போட்டிகள் வரப்போகின்றன. அதற்கான அழைப்பிதழ்கள் கூட எமக்குக் கிடைத்திருக்கின்றன. நாம் விளையாடிய கொனிவா என்ற அமைப்புக்குள்ளும் அடுத்தடுத்துப் பல போட்டித்தொடர்கள் வரவுள்ளன. வெவ்வேறு அணிகளுடனான சர்வதேச போட்டிகளில் தான் எமது இரண்டு அணிகளையும் இறக்கி விளையாடுவது என்கிற திட்டத்தில் இருக்கின்றோம். எனவே எங்களின் இந்த இரு அணிகளையும் மேலும் வலுப்படுத்தி இந்தப் போட்டிகளில் ஈடுபடுவது ஒரு பக்கம் இருக்கிறது. அதே போல அடுத்தடுத்த தமிழ்த் தலைமுறைகளை அவர்கள் வசிக்கின்ற நாடுகளில் உள்ள விளையாட்டுகளில் ஈடுபடுத்துவது, அது காற்பந்தாட்டம் தவிர்ந்த விளையாட்டாகினும் கூட அவர்களை விளையாட்டுத்துறையில் வளர்ப்பதும் எமது அமைப்பின் விருப்பம் தான். எனவே ஒரு பக்கம் சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்வது ஒரு நோக்கமாக இருந்தாலும் எங்களின் பிள்ளைகளை அடித்தளத்திலிருந்தே விளையாட்டுத்துறை யில் வளர்ப்பதும் எங்களின் நோக்கமாக இருக்கின்றது. இதனையே அடுத்தடுத்த வருடங்களில் நடைமுறைப்படுத்துவோம்.

**கேள்வி: உங்களின் இந்தச் செயற்பாட்டுக்கு எவ்விதமான ஆதரவுகள் உலகத்தமிழினத்திடமிருந்து கிடைத்தன?**

**பதில்:** எங்களின் மகளிர் அணியினர் இறுதிப்போட்டியில் கலந்துகொண்டமையையிட்டு மக்கள் மத்தியிலிருந்து எமக்குக் கிடைத்த ஆதரவை நாம் எதிர்பார்க்கவில்லை. ஒரு பெரிய மேடையில் வைத்துத் தமிழ் மக்கள் எம்மைப் பார்த்தமை எமக்குப் பெருமைசேர்த்த விடயம் தான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆண்களுக்கு சமமாக பெண்களும் களத்திலிறங்கிய சமுதாயத்தினர்தான் நாங்கள். அந்தப்பக்கத்திலிருந்து பார்க்கும்போதுகூட தமிழ் மக்கள் புல்லரிப்பைத்தரக்கூடிய வகையில் ஆதரவைத் தந்தனர். எத்தனையோ பெற்றோர், தமிழீழ அணிக்காக விளையாடுவதைப் பெருமையாகக் கூறினர். அதுவே எங்களுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளித்தது. எங்களின் இனம், எங்களின் நாடு என ஊடகங்கள் அளித்த வரவேற்பு மிகுந்த நம்பிக்கையைத் தந்தது. குறிப்பாக 22 வீராங்கனைகளினதும் பெற்றோர், வெவ்வேறு நாடுகளிலிருந்தும் எங்களின் அணியையும், பணியாளர்களையும் நம்பி அனுப்பிவைத்தமையும் மிகப்பெரிய நன்றிக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கதிர்காமக் கால்நடைப் பயணம்; - சில குறிப்புகள்

து.கௌரீஸ்வரன்

கதிர்காமத்துக்கான நீண்டதூரக் கால்நடைப் பயணம் என்பது இலங்கைக்கேயுரிய பழங்குடிகளின் பண்பாடுகளுடன் தொடர்புடைய வரலாற்றுத் தொடர்ச்சியைக் காட்டும் மரபுரிமைப் பயணங்களுள் ஒன்றாக இன்றுவரை விளங்கி வருகின்றது.

இலங்கைத் தீவின் கரையோரப் பகுதிகளிலும் உள்ளகப் பகுதிகளிலும் வாழ்ந்த பழங்குடி மக்களில் ஒரு தொகுதியினர் வடபுலத்தின் நந்திக்கடலோரம் வைகாசித் திங்களில் ஒன்றிணைந்து அங்கிருந்து கிழக்கின் கரையோர வழிபாடுகளினூடாகக் கால்நடையாக நடக்கத் தொடங்குவர். அந்த நடைபயணத்தின் நிறைவாக மாணிக்க கங்கையின் கதிர்காமத்தைச் சென்றடைந்து அங்கே ஒன்று சேர்ந்து தமது குலதெய்வத்தைக் கொண்டாடி மகிழ்ந்த பெரும் விழாவாக கதிர்காமத்துக்கான கால்நடைப் பயணம் ஆரம்பத்தில் இருந்துள்ளது என்பதை வாய்மொழி வரலாற்றுக் கதைகள் வழியாக அறிகின்றோம்.

வரலாற்று ஓட்டத்தில் இலங்கைத்தீவில் ஏற்பட்ட பல்வகைப் பண்பாடுகளின் இணைவு, கரைவு, செல்வாக்கு மற்றும் பௌதீக அமைப்பில் உருவான மாற்றங்கள் என்பவற்றின் மத்தியிலும் கதிர்காமத்துக்கான கால்நடைப் பயணம் அதன் தொடர்ச்சியை இழக்கவில்லை. மாறாக இலங்கைத்தீவின் பழங்குடிப் பண்பாட்டின் தொடர்ச்சியாக மேலும் வலிமை பெற்று வந்துள்ளது. இதனால் தொட்டுணரக்கூடிய, தொட்டுணரமுடியாத பல்வேறு அம்சங்களைக் கொண்ட மரபுரிமைப் பயணங்களுள் ஒன்றாக கதிர்காமத்துக்கான கால்நடைப் பயணம் நவீன காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. வரலாற்றில் கதிர்காமத்துக்கான கால்நடைப் பயணம் மக்கள் குடியிருப்புகளிலும், காட்டுப் பகுதிகளிலும் பல்வேறு தெய்வங்களுக்கான வழிபாட்டு மரபுகளையும், பண்பாடுகளையும் உருவாக்கி வளர்த்துச் சென்றுள்ளமை பற்றியும் ஆய்ந்தறிய முடிகிறது.



குடும்பங்களாகவும், சமூகங்களாகவும், ஊரவராகவும், தனியாளாகவும், இன, மத, வயது, பால், பருவ வேறுபாடுகளைக் கடந்து நம்பிக்கை, பக்தி, வேண்டுதலும் வேண்டுதலுக்கான நிறைவேற்றலும், தெய்வத் தொண்டு, முன்னோரின் கடமைகளைத் தொடருதல், சுவட்டுறவு, உளநலம், உடல் நலம் எனப்பல்வேறு ஆக்கபூர்வமான நோக்கங்களுடன் கதிர்காமத்துக்கான கால்நடைப் பயணம் நடைபெற்று வருகின்றது.

இந்தக் கால்நடைப் பயணத்தின்போது முருகன் சிறுவனாகவும், இளைஞனாகவும், வயோதிபனாகவும் வந்த, வருகின்ற கதைகளும், வள்ளி சிறுமியாகவும், யுவதியாகவும், அம்மாவாகவும், மூத்த தாயாகவும் காட்சி கொடுத்த, கொடுக்கும் கதைகளும் கதிர்காமத்துக்கான நடை பயணம் வயது வேறுபாடுகளைக் கடந்து எல்லோருக்கும் பொதுவான மரபுரிமைப் பயணம் என்பதைப் பறைசாற்றி நிற்கின்றது எனலாம்.

கதிர்காமத்துக்கு நடக்கத் தொடங்கி விட்டால் ஒவ்வொருத்தரும் தத்தமது தனிப்பட்ட அடையாளங்களைக் கடந்து சாமியாகவே பார்க்கப்படும் பொதுத்தன்மையானது, இப்பயணம் எல்லோருக்குமானது, வரையறைகளுக்கு அப்பாற்பட்டது என்பதை ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றது.

இன்றைய அதிநவீன காலத்தில் இலத்திரனியல் தொழில்நுட்பத்துக்குள் கட்டுண்டு நுகர்வுப் பொருளாதாரப் பண்பாட்டுச் சூழலில் வளரும் ஒவ்வொருவரும் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வாழ்வதற்கான அனுபவங்களையும், ஆற்றல்களையும் ஆளுமையினையும் வழங்க வல்ல மரபுரிமைப் பயணங்களுள் ஒன்றாகக் கதிர்காமத்துக்கான நடைபயணமும் அமைந்துள்ளது என்ற செய்தியும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியதாக உள்ளது.



# விட்டுக்கொடுத்தலும் யாத்திரையே!

விஜயலட்சுமி சேகர்

இப்போது எங்கும் கதிர்காம யாத்திரை பற்றி அதிகம் பேசுகின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் கலண்டர் தாள் புரட்டி கணக்கெடுப்பு நடக்கிறது. எப்பொழுது கொடியேறுகிறது?தீர்த்தம் எப்போது? என்றெல்லாம் இப்போதே பார்த்து அங்கு செல்வதற்கான திட்டமிடலும் நடக்கத் தொடங்கிவிட்டது. இதில் ஆண்களை விட பெண்களே அதிகமாக அக்கறை கொண்டுள்ளதை காணும் போது மிக மிக மகிழ்ச்சி. தங்கள் வீட்டுப் பொறுப்புகளை எப்படி யாரிடம் விடுவது? பிள்ளைகளின் பரீட்சைகள் வருகிறதா?பாடசாலை நாள்கள் வருகிறதா?.எப்படி படிப்பு குழம்பாமல் அதனைக் கையாள்வது? விடுபட்ட பாடங்களை எப்படி அவர்களுக்கு படிப்பிப்பது? என்றும் அவர்கள் திட்டமிடத் தலைப்பட்டுள்ளனர். பெண்கள் எதனையும் முற்கூட்டியே தீர்மானித்து திட்டமிடுபவர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு எதுவும் தளம்பப் போவதில்லை.

பிள்ளைகளும் நாள்களை எண்ணத் தொடங்கி விட்டார்கள். பெண்கள் வீட்டில் இருக்கும் பிராணிகள், வயது போனவர்கள் அனைவருக்குமான பொறுப்புகளை தீர்மானிக்கத் தொடங்கியுள்ளனர். ஆண்கள் தங்களுக்கான ஒரு சேட், குளிக்க ஒரு சாறம், காவி வேட்டி, இசைக்கு சில கருவிகள் என எடுக்க, பெண்கள் இலகுவாக தூக்கக்கூடிய சமையல் பாத்திரங்கள், பழுதாகாமல் வைத்திருந்து சமைக்கக்கூடிய உணவுகள், மருந்துகள், ஓய்வுநேரத்தில் பிள்ளைகளுடன் பாடக்கூடிய பக்திப் பாடல்கள் என சேர்ப்பதில் பரபரப்பாகி விடுவார்கள். சில வீட்டுவேலைகளை சில வேளை பெண்களால் பொறுப்புக்கொடுக்க முடிவதில்லை. இத்தருணங்களில் அவர்கள் கவலையுடன் வீட்டிலேயே இருந்து விடுவார்கள். எனினும் குடும்பத்துக்காக நடப்பது என அவர்களது நேர்த்திக் கடன்கள் அதிகமாக இருக்கும். ஆகவே வளர்ந்த ஆண்கள் செய்யவேண்டியது என்னவெனில், அனைவருக்காகவும் பெண்கள் நேர்த்திக் கடன் வைத்து நடப்பதால், பெண்களது இப்பொறுப்புக்களை தாம் வீட்டில் இருந்து எடுப்பதும் பெண்களை யாத்திரைக்கு செல்ல உதவி புரிவதுமே. இது மிகுந்த புண்ணியமாகும். யாத்திரை என்பது பெண்கள், சிறுவர்கள் உட்பட அனைவருக்கும் ஒரு தியானம் போன்றது. கையில் முதுகில், தோளில் சுமையுடன் இளம் பெண்கள் உட்பட சிறுவர்களும் சேர்ந்து நடப்பதைப் பார்க்கும் போது யாத்திரையின் மகிமையும், நேர்த்திக்கடனின் பெறுமதியும் தெரிகின்றன.

பொதுவாகவே இளம் பெண்கள் வெளியில், பொது இடத்தில் குளித்தல், சாப்பிடுதல், தமது அன்றாடக் கடமைகளை முடிப்பது மிக மிகக் குறைவு. எனினும் இந்த யாத்திரை நேரத்தில் என்ன அதிசயம் அனைவரும் மனிதராகி மனதில் எவ்வித சலனமுமின்றி இவற்றைச் செய்வார்கள். 'சாமி' எனும் ஒற்றைச் சொல்லுக்கு உரிய மகிமையை யாத்திரையின் போதே உணரலாம். அன்பு, கருணை, இரக்கம், ஒத்துழைப்பு, பரிவு அத்தனையும் அந்த 'சாமி' எனும் ஒற்றைச் சொல்லுக்குள் வாழ்வதைக் கண்ணாரக் காணலாம். ஆண், பெண், சிறுவர், குழந்தை, வயோதிபர் அனைவரும் யாத்திரை முடியும் வரை 'சாமி' யேதான். 'இறைவன் வெளியில் எங்கும் இல்லை அவன் உனக்குள்தான்' எனும் நமது பெரியார்களின் வாக்கு நிஜமாவதை நாம் கதிர்காம யாத்திரையின் போதே காண்கிறோம். எத்தனையோ புத்தகங்களில் மனிதம் பற்றியோ, ஒழுக்கம் பற்றியோ நாம் படிக்கலாம். அத்தனையும் சித்தி அடைந்தவுடன் முத்தி பெற்று விடும் எனினும் கதிர்காமயாத்திரையின்போது நாம் உணரும் இந்த அனுபவப் பாடம் என்றென்றும் அழிவதில்லை. 'இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள்' ஆகவே வன்முறையற்ற சமூகம் எமக்குத் தேவை எனில் மேடைகள், புத்தகங்கள், அறிஞர்கள் மாநாடுகள், பல் சமய ஒன்றிய மாநாடு போன்றனவல்ல. மாறாக, 'யாத்திரை', 'சாமி' எனும் உயிருள்ள கானகத்தில் அவர்கள் ஒரு வாரம் உலாவரட்டும். அன்பு கருணை, தாய், அனைத்தையும் பரிபூரணமாக அனுபவித்து நாளைய மனிதராக மீண்டு வருவார்கள். அன்பு ஒன்றே பலமாக பெண்கள் அவர்களுடன் இருப்பார்கள், அங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்


கே.பிரவீனா
தரம் - 9
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



ஞா. பார்கவி,
தரம் -3C,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.




மாணவர்களே!
நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555




ஆர்.அதனன்
தரம் - 2D
யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தி.



ற.அனகா
தரம் - 1A
ஏஞ்சல்ஸ் பாடசாலை



சு.மதுசாயினி,
தரம் - 10
வவு/ விபுலானந்தா கல்லூரி



த.பிரணயன்,
தரம் - 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



அ.நிதுஷனா
தரம் - 8F
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



வி. பூஷானுஜா,
தரம் - 8
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



## சிட்டுக்குருவி

சின்னச் சின்னச் சிட்டுக்குருவி
சிறகு விரித்து பறக்கும் குருவி
வண்ண வண்ண நிறத்தில்
வனப்பாய் வானில் பறக்கும் குருவி

கொட்டிக் கிடக்கும் தானியக் குவியலை
கூடி வந்து கூடி நின்று

தொட்டு தொட்டு கொத்தித் தின்று
கூடிப் பறந்து கூடு செல்லும்

ஒன்றாய் வராமல் ஒன்றோடொன்று
சேர்ந்து வரும் சிட்டுக்குருவி
நன்றாய் செப்பும் பாடம் செவியுறுவீர்
கூடி வந்தால் கோடி நன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தருக்குப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் அணி வெளியேறத்தக்க சூழ்நிலைகளை ஏற்படுத்தினார். அடுத்த கட்டமாக ஆயுதப் போராட்ட மரபில் வந்த பங்காளிக் கட்சிகள் விலகிப் போகக்கூடிய நிலைமைகளை அவருடைய பட்டத்து இளவரசர் ஏற்படுத்தினார். முடிவில் தமிழரசுக் கட்சி மட்டும் மிஞ்சியது. இப்பொழுது அதுவும் இரண்டாக உடைந்து நீதிமன்றத்தில் நிற்கின்றது. அதுமட்டுமல்ல, அவருடைய காலத்தில் கிழக்கில் வடக்கை எதிர்த்துக் கொண்டு தெற்குடன் கைகோர்க்கும் ஒரு கட்சி மேலெழுந்து விட்டது.

மேலும், கடந்த ஜனவரி மாதம் நடந்த கட்சித் தலைவருக்கான தேர்தலின்போது யாருக்கு செயலாளர் பதவி கொடுப்பது என்ற விவாதங்களில் திருகோணமலையா? மட்டக்களப்பா? எது உண்மையாகக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவது? என்ற ஒரு விவாதமும் எழுந்தது. அதாவது சம்பந்தரின் காலத்தில் கிழக்கில் உப பிரதேசவாதம் ஒன்றும் உற்பத்தி செய்யப்பட்டது. ஆயின்,சம்பந்தர் தமிழரசியலை எங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்?

இந்தத் தோல்வி எங்கிருந்து வந்தது? சம்பந்தரின் அரசியல் வழியின் விளைவு அது.சிங்கள மக்களைப் பயமுறுத்தக்கூடாது என்று அவர் உறுதியாக நம்பினார்.ஆனால் தமிழ் மக்களின் பயங்களை ; கூட்டுக் காயங்களை; கூட்டுத் துக்கத்தை, கூட்டு மனவடுக்களை அவர் பொருட்படுத்தவில்லை.ஆயுதமோதலுக்கு பின்னரான ஒரு சமூகத்தில் கூட்டுக் காயங்களுக்கும் கூட்டுத் துக்கத்துக்கும் கூட்டுச் சிகிச்சையாக அமையவில்லை ஓர் அரசியலை; பண்புரு மாற்ற அரசியலை முன்னெடுத்திருக்க வேண்டிய ஒரு தலைவர் அவர்.ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. செய்யத் தேவையான அரசியல் உள்ளடக்கம் அவரிடம் இருக்கவில்லை.

2009 மே மாதம் தோற்கடிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் ஒரு விளைவுதான். அது மூல காரணம் அல்ல. மூல காரணம் இன ஒடுக்குமுறைதான். அதாவது இலங்கைத்தீவின் இனப்பல்வகைமையை ஏற்றுக் கொள்ளாமை.யுத்த வெற்றிகளின் மூலம் மூலகாரணம் மேலும் வீங்கித் தடித்தது.அது யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற விரும்பவில்லை.மாற்றவும் முடியாது.ஏனென்றால் அது ஓர் இனப்படுகொலை.

போரில் வெற்றி பெற்ற ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை அடிப்படையாக வைத்து ஒரு கட்சியைக் கட்டி எழுப்பினார்கள். அதன்மூலம் யுத்த வெற்றிவாதத்துக்கு தலைமை தாங்கினார்கள்.யுத்த வெற்றி வாதம் எனப்படுவது நாட்டைத் தொடர்ந்தும் பிளவுண்ட நிலையிலே பேணுவதுதான்.வென்றவர்களும் தோற்றவர்களுமாக நாடு தொடர்ந்து பிளவுண்டிருக்கும்.இவ்வாறு யுத்த வெற்றிவாதிகள் நாட்டைப் பிளவுண்ட நிலையில் பேணும்பொழுது தோற்கடிக்கப்பட்ட தரப்பின் தலைவராகிய சம்பந்தரோ "பிளவுபடாத இலங்கைக்குள்;பிரிக்கப்படமுடியாத இலங்கைக்குள்" என்று மந்திரம்போல சொல்லிக் கொண்டு,சிங்கள மக்களின் பயங்களைப் போக்குகிறோம் என்று புறப்பட்டு,இறுதியிலும் இறுதியாக யுத்த வெற்றிவாதிகளால் தோற்கடிக்கப்பட்டார்.

யுத்தவெற்றிவாதம் எனப்படுவது, சிங்கள - பௌத்த இனவாதத்தின் 2009க்கு பின்னரான "அப்டேட்டட் வேர்சன்"தான்.யுத்தவெற்றிவாதமானது தொடர்ந்து ஒடுக்குமுறைகளையும் ஆக்கிரமிப்பையும் முன்னெடுத்துக் கொண்டிருக்க, அதாவது நாட்டைப் பிளவுண்ட நிலையிலே தொடர்ந்தும் பேண, சம்பந்தரோ நேசக்கரம் நீட்டிக் கொண்டிருந்தார்.முடிவில் யுத்த வெற்றிவாதம் சம்பந்தரின் வழியைத் தோற்கடித்தது.அவருடைய விசுவாசத்துக்கு பரிசாக எதிர்க்கட்சித் தலைவரின் மாளிகையை இறக்கும்வரை அவருக்கு வழங்கியது.

இப்படித்தான் சம்பந்தர் தோற்கடிக்கப்பட்டார். தென்னிலங்கையோடு தன்னை சுதாகரித்துக் கொள்வதற்காக அவர் வகுத்த வழியின் விளைவாக கூட்டமைப்பு உடைந்தது.முடிவில் அவருடைய தாய்க்கட்சியும் உடைந்து விட்டது.சம்பந்தர் தோற்றுப் போனார். தோல்வியுற்ற ஒரு தலைவராகத்தான் அவர் இறந்து போயிருக்கிறார். அவருடைய உடல் யாழ்ப்பாணத்தில் தனித்து விடப்பட்டிருந்த அந்த இரவிலிருந்து எதிர்காலத் தலைவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும்.

எனவே, இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். சம்பந்தர் தமிழ் மக்களைச் சிதறடித்து விட்டார்.தமிழ் மக்களின் அடிப்படைப் பலங்களைப் பொருத்தமான விதங்களில் கையாளத் தவறி, தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தியிருக்கிறார். முடிவில் தானும் தனிமைப்பட்டுப் போனார்.எனவே சம்பந்தருக்கு பின்னரான தமிழ் அரசியல் என்பது, சம்பந்தர் சிதறடித்தவற்றை சேர்த்துக் கட்டுவதுதான். சம்பந்தர் தமிழ் மக்களின் எந்தெந்த பலங்களைச் சிதறடித்தாரோ, அவற்றை எல்லாம் மீண்டும் ஒன்றிணைப்பதுதான். எந்தெந்த கட்சிகளை சிதறடித்தாரோ, அவற்றை எல்லாம் ஒன்றாக்குவதுதான்.சம்பந்தருக்குப் பின்னரான தமிழ் அரசியல் என்பது ஒன்று திரட்டும் அரசியலாக இருந்தால்தான் அது அதன் கடந்த 15 ஆண்டு கால தோல்வியின் தடத்திலிருந்து வெளியே வரலாம்.

இங்கேதான் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு கால முக்கியத்துவம் பெறுகின்றது.இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்தால்,அதில் தமிழ் மக்களுக்கு ஒரே ஒரு தீர்க்கதரிசனமான தெரிவுதான் உண்டு.ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது.ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் தமிழ் மக்களை ஒன்றாக்குவது. சிதறடிக்கப்பட்டவற்றை ஒன்று சேர்ப்பது. சம்பந்தரின் வழியிலிருந்து விலகி வருவதென்றால் அதைவிட வேறு வழி இல்லை.

# வேளைகள் ஆகுமே வசந்தமாய்....



நன்றியால் மனிதனை விஞ்சிடும்
நாயெனும் பிராணியைப் பேணியே
ஒன்றிய வாழியாய்க் காத்துமே
ஒக்குதல் காருண்யம் ஆகுமே!

அன்பினைச் செலுத்தியும் பெற்றுமே
அழகிய உறவதாய்ப் பேணியே
துன்பமே மேவிடாத் துணையதாய்
துளிர்க்கலாம் மகிழ்விலே நிறையவே!

நீரதை வெறுத்திடும் நோயதை
நெருங்கிட முன்பதாய்த் தடுக்கவே
நேரமே ஒதுக்கியே "ஏஆர்வி"
நேர்த்தியாய் ஏற்றுவோம் ஆண்டதில்!

ஊசியை ஏற்றிட மறக்கையில்
ஊறுதான் எம்மிலே விளையுமே
நாசியின் மூளையைச் சிதைத்துமே
நாசமாய் உயிரதைச் சரிக்குமே!
நாயது கடித்திடின் காயத்தை
நன்குமே ஓடுநீர் சவர்க்காரத்தால்
தேய்த்திடா கழுவிட வேண்டுமே
தேர்ந்துமே பதினைந்து நிமிடமாய்!

வைத்தியசாலையை அணுகியே
வாய்த்திடும் உயரிய சிகிச்சையை
கைத்தலம் நாளது இரண்டினுள்
கழித்திடா பெற்றிடல் வேண்டுமே!

நன்றியின் நாயதை நாளுமே
நலமுடன் பேணுதல் கடமையே
மூன்றிலும் அதிகமாய் ஆண்டுகள்
முயன்றுமே ஏற்றுவோம் ஊசியை!

வளவினைக் கடந்திடா விதமதாய்
வகையுற நாயதை வளர்த்துமே
இழவுகள் தந்திடும் நோயது
இயைந்திடாக் காத்திடல் கடமையே!

காப்பகம் சிறப்பதாய் அமைத்துமே
கட்டிடாக் காலிகள் சேர்த்துமே
ஆப்பதை வைத்திடும் நோயது
அண்டிடா உயிர்களைப் பேணுவோம்!

ஒன்றதாய் விழித்துமே நாமெலாம்
ஓரணிச் செயல்களில் நின்றிடின்
வென்றிடும் ஜீவனின் காருண்யம்
வேளைகள் ஆகுமே வசந்தமாய்!

சூரியநிலா, உ சன்.

# பாகம் 2



# ஊர்ப்புதினம்

○ இராகவன்

"துரை மாமா தன்னைப்பற்றி ஊர்ப் புதினத்தில வந்ததையெல்லாம் வாசிக்காமலேயே செத்திட்டார்'' எண்டு சிவமண்ணை சொன்னதைக் கேட்டாப்போல எனக்குச் சரியான கவலையாப் போச்சு. சிவமண்ணையும் "இது என்ர வாழ்க்கையில தீராத கவலை தம்பி!" எண்டு சொன்னார்.என்ன செய்யிறது? எல்லாம் காலத்தின் கட்டளை. ம்..... துரைமாமாவின்ர கதை வந்தாப்போலதான் எனக்கு இன்னொரு சங்கதியும் ஞாபகத்துக்கு வருகுது. எங்கட துரை மாமா வைத்திலிங்கமண்ணைக்கு லொறி ட்றைவராயிருந்தவரெண்டு ஊர்ப்புதினத்தின்ர முதலாம் பாகத்தில சொல்லியிருக்கிறன்.

இப்பிடித்தான் நானும் அம்மாவும் ஒருநாள் பொழுதுபடேக்குள்ள எங்கட மாட்டுக்குத் தவிடு வாங்க வைத்திலிங்கமண்ணை வீட்டைபோனம். அங்கை நாங்கள் போகேக்குள்ள "சின்னி" எண்ட துணி வெளுக்கிற மனிசியுமிருந்தவ. நல்ல கறுவல் கட்டை மனுசி. எப்பவும் ஒரு பச்சை சீலை தான் குறுக்குக்கட்டாக் கட்டியிருப்பா. அநேகமாச் சட்டை போடாமல் வெறும் மேலோடதான் திரிவா. சாதுவான பல்லு மிதப்பு. அந்த மனுசியக் கண்டால் எனக்கப்ப சரியான பயம். ஏனெண்டால் அந்த மனுசிக்கு கலைவந்து உருவாடுறதை ரண்டு மூண்டுதரங்கண்டிருக்கிறன். அண்டைக்கும் அந்த மனுசியை அங்க கண்டாப் போல எனக்குப் பயம் வந்திட்டுது.

உந்த மனுசிக்கு இப்ப உரு வந்தால் என்ன செய்யிறதெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்குள்ளையே நான் பயந்த மாதிரியே அந்த மனுசிக்கு உருவந்து கலையாடத்தொடங்கிட்டுது. எனக்கு அஞ்சுங் கெட்டு அறிவுங்கெட்டு அம்மாவோடை அண்டிச் சுவரோட சாய்ஞ்சு இருந்திட்டன். அவா ஆடின ஆட்டத்தில குடுமிகழண்டுட்டுது. "தல்லையப்புலம் பத்திரகாளி வந்திருக்கிறன்" எண்டு நடுங்கின குரலில சொல்லிச்சுது. பிறகு ஏதோ அறம்பிறமாச் சிங்களத்திலயும் வெளுத்து வாங்கிச்சுது. கொஞ்சநேரம் நான் திடுக்காட்டியப் பட்டுப்போனன். பிறகு மனுசி சுவரோட சாய்ஞ்சுட்டுது. உருவாடி முடிஞ்சாப்போல "தல்லையப்புலப்பத்திரகாளி வராசிங்களப் பத்திரகாளி" எண்டு அம்மா சொன்னா. ஆக்கள்ள தமிழ்,சிங்களம்,இங்கிலிஸ் எல்லாம் தெரிஞ்சமாதிரி கடவுள்களிலயும் அப்படியிருக்குமாக்குமெண்டு நான் நினைச்சன் .


**48**

எங்கட வீட்டுக்குப் பக்கத்தில கோழி வியாபாரியார் எண்டொருத்தர் இருந்தவராம். அவர் கோழி,முயல், இதுகளெல்லாம் வளக்கிறவராம். அவரை அம்மன்னா எண்டுங் கூப்பிடுறவையாம். அவர் அடுப்பு மூட்டுறதொண்டால் ஒரு தடியில சீலையைச் சுத்தி எண்ணெயில தோச்சுக் கொணந்து எங்கட அம்மா விட்ட கொளுத்தித் தரச்சொல்லி வாங்கிக் கொண்டு போறவராம். நான் பிறந்து இருவத்தோராவது நாள் அவர் செத்தவராம். எங்கட வீட்டுக்கட்டிலக்கொண்டு போய்த்தான் அவரை வளத்தினதாம். இதெல்லாம் அம்மா சொல்லித்தான் எனக்குத் தெரியும் அவர் "முட்டை கோதுமணை காளியாத்தை! முழங்கால் சிறட்டையணை காளியாத்தை!" எண்டு தல்லையப் புலம் பத்திரகாளியை நக்கலடிச்சுப் பாடுவாராம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





○ பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும் 10

**1912** ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் பல தொழிற்சங்க வேலை நிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் அவை இலங்கை நாட்டின் பொருளாதாரத்தில் அதிக தாக்கத்தை விளைவிக்கவில்லை . எனினும் 1912 ஆம் ஆண்டு இடம்பெற்ற ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்திடம் நாட்டின் பொருளாதாரத்தை செயலிழக்க வைக்க கூடிய வலு உண்டு என்பதை நிரூபித்துக் காட்டியது. இதனால் அச்சமடைந்த பிரித்தானிய அதிகாரிகள் தொழிலாளர்களின் கஷ்டங்களை அறிவதற்காகவும் இனிமேல் தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காவும் ஒரு குழுவை உருவாக்கினர். அந்த ஆணைக்குழுவில் சேர் பொன் . அருணாசலமும் ஒருவராக அங்கம் வகித்தார்.

அக் குழுவில், அங்கம் வகித்த அருணாசலம் ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி தனது அறிக்கையில் குறிப்பிடும் போது " உலகப் பாட்டாளி வர்க்கத்தினரிடையே வளர்ந்துவரும் விழிப்புணர்வின் அலையால் இலங்கை பாதிக்கப்படாமல் இருக்குமென எதிர்பார்க்க முடியாது" எனக் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்டதைப் போலவே தொழிலாளர் வர்க்க உணர்வு இலங்கையில் மேலெழத்தொடங்கியது.

எனினும் இவ்வாறு துளிர்விட்ட தொழிலாளர் வர்க்க உணர்வினை இன உணர்வின் மேலாதிக்கம் பின்னர் தீக்கிரை ஆக்கியது.

### மார்க்சிய வழியில் அருணாசலம்

ஆரம்ப காலம் முதலே அருணாசலத்திடம் உழைப்பாளிகளை முதன்மைப்படுத்தும், உழைப்பாளிகளுக்கு ஆதரவான மனப்பாங்கு காணப்பட்டது. இதனை அன்றைய சில வரலாற்று நிகழ்வுகள் மூலம் எம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

குறிப்பாக 1865ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "எசமான- பணியாள்" சட்டத்தின் அநீதிகளைச் சமூக சேவைச் சங்கம் மூலம் தொடர்ந்தும் சேர் பொன். அருணாசலம் எதிர்த்துவந்தார்.

எசமான் - பணியாள் சட்டம் என்றால் என்ன ?தோட்டங்களை விட்டு அகலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மீது ஒப்பந்த முறிவுக்காகக் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து அவர்களை மீண்டும் அதே தோட்டத்துக்கே திரும்பவும் உழைக்க வழிவகுக்கும் சட்டமே எசமான்- பணியாள் சட்டம். இந்தச் சட்டத்தையே அருணாசலம் கடுமையாக எதிர்த்தார்.

" ஏழையாகவும் அறிவற்றவனாகவும் உதவியற்றவனாகவும் இருக்கும் தொழிலாளி, வேலைக்குச் சேர்ப்போரினதும் முதலாளிகளினதும் கொடுங்கோன்மையிலிருந்து தன்னைக் காப்பாற்ற முடியாமல் உள்ளான்" என்றும் அவர் விமர்சித்தார். விமர்சித்ததுடன் மட்டும் நின்றுவிடாமல் தொழிலாளர் நலனைப் பாதுகாக்க இலங்கைத் தொழிலாளர் நலச் சங்கத்தை ( Ceylon workers welfare league) 1919 ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்தச் சங்கத்தின் தலைவராக அருணாசலமும் செயலாளராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும் கேம்பிரிட்ஜ் பட்டதாரியுமான பெரிசுந்தரமும் செயற்பட்டனர்.

அன்று அருணாசலம் உருவாக்கிய இலங்கைத் தொழிலாளர் சங்கம் 1920 ஆம் ஆண்டளவில் இலங்கைத் தொழிலாளர் கூட்டுக் கழகமாக உருமாற்றம் பெற்றது. இவ்வாறான வரலாற்று நிகழ்வுகளை "இலங்கையின் இன வர்க்க முரண்பாடு" எனும் நூலில் சுட்டிக்காட்டும் கலாநிதி குமாரி ஜயவர்த்தன, 'அரசியல், சமுக சீர்திருத்தத்தில் மட்டுமல்லாது இலங்கைத் தொழிலாளர் இயக்கத்துக்கும் முன்னோடியாக சேர் பொன். அருணாச்சலம் திகழ்ந்தார் ' என ஆதாரபூர்வாமாக நிறுவ முற்படுகின்றார்.



சேர் பொன். அருணாசலம்

### முதலாம் உலக மகா யுத்தம் இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம்

முதலாம் உலக மகா யுத்தம் இடம் பெற்றதன் விளைவாக உலகளாவிய ரீதியில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதோடு, அவற்றின் விலையும் உச்சநிலையிலேயே காணப்பட்டது. இதனால் சாதாரண அடி மட்டத் தொழிலாளிகளால் அவற்றை வாங்கமுடியாத நிலை உண்டானது. பட்டினிச்சாவுகள் நிகழும் அபாயமும் ஏற்பட்டது. இவ்வாறான நிலைமை இலங்கையிலும் பரவியது. இக் காலகட்டத்திலேயே ஏ.ஈ.குணசிங்க தலைமையில் இலங்கைத் தொழிற் சங்கம் உருவாக்கம் பெற்றது. மகாத்மா காந்தி மற்றும் ஏனைய இந்தியத் தேசிய இயக்கத் தலைவர்களுடன் மிக நெருக்கமான உறவு கொண்ட ஒருவர் ஏ.ஈ. குணசிங்க. தொழிலாளர் உரிமைக்காகவும் அதேசமயம் இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைக்காகவும் அக்காலத்தில் குரல்கொடுத்த சிங்களத் தலைவர். சிங்கள இனத்தவராக இருந்த போதிலும் சிங்களவர் அல்லா சிறுபான்மை இனத்தவர் மீதும் அக்கறை கொண்டவராக அவர் காணப்பட்டார். இவ்வாறான இனப்பாகுபாடற்ற மனப்பாங்கு காரணமாகஇலங்கைத் தமிழர்கள் மத்தியில் ஏ.ஈ.குணசிங்கவுக்கான ஆதரவு மனோநிலை உருப்பெற்றது.

ஏ.பி. தம்பி ஐயா என்ற இலங்கைத் தமிழர் இலங்கைத் தொழிற் சங்கத்தின் மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவராகக் காணப்பட்டார். அதனை வெளிப்படுத்தும் வகையில் இந்தச் சங்கத்தின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைத்தார். அன்றைய கால கட்டத்தில் பௌத்தத்துக்கும், சிங்களத்துக்கும் மட்டும் முன்னுரிமை அளிக்காது அனைத்து இன மக்களையும் அனுசரித்துப் போகும் தலைமைத்துவப் பண்பு. ஏ.ஈ. குணசிங்கவிடம் அதிகமாகக் காணப்பட்டது. அதற்கான பிரதான காரணம் இன ஒற்றுமையின் மூலமே தொழிலாளர் ஒற்றுமை வலுப்படுத்த முடியும் என்பதை ஏ.ஈ . குணசிங்க ஆழமாக நம்பியமைதான். அவரின் நம்பிக்கை வீண்போகவில்லை. இலங்கைத் தொழிற்சங்கம் இன, மத பேதங்களைக் கடந்து கொழும்புத்தொழிலாளர்களை ஓரணியில் ஒருங்கிணைத்தது. குறிப்பாக 1923 ஆம் ஆண்டு கொழும்புத் தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கு ஏ. ஈ.குணசிங்க அளித்த தலை மைத்துவம் தேசிய முக்கியத்துவம் பெற்றதாகும். சிறுபான்மை, பெரும்பான்மை என்ற இன வேறுபாடு இன்றி 'இலங்கைத் தொழிலாளர் ' என்ற தொழிலாளர் வர்க்க உணர்வு ஏ.ஈ குணசிங்கவின் தலைமைத்துவத்தின் மூலம் கொழும்புத் தொழிலாளர்களால் வெளிப்படுத்தப்பட்டது. இந்தத் தொழிலாளர் வர்க்க உணர்வே பின்னாளில் சகல இனங்களையும் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட அகில இலங்கைத் தொழிற்சங்க காங்கிரஸை ஏ.ஈ. குணசிங்க நிறுவுவதற்கு வழிவகுத்தது. 1928 ஆண்டு நிறுவப்பட்ட அகில இலங்கைத் தொழிற்சங்க காங்கிரஸின் முதலாவது கூட்டத்தில் ஏ.ஈ.குணசிங்க இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைமையை கடுமையாக விமர்சித்தார். சூழ்ச்சி மிக்க அரசியல்வாதிகள், கேடு தரும் துணிச்சல் வீரர்கள் என்றெல்லாம் வர்ணித்தார்.



ஏ.ஈ குணசிங்க

தொழிலாளர்களை அவர்களது அவல நிலையிலிருந்து விடுவிக்க இலங்கைத் தொழிற் சங்க காங்கிரஸால் மட்டுமே முடியும் எனவும் இன, மத, நிற வேறுபாடுகள் தொழிலாளர் இயக்கத்துக்கு இல்லை என்றும் அவர் உறுதியாகக் கூறினார்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org